
ISSN 1391-958X

# சொல்

பெண்ணின் மகத்துவம்



சொல் ▪ முதலாம் காலாண்டு ▪ 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்

பெண்ணின் மகத்துவம்

சொல் ■ முதலாம் காலாண்டு ■ 2005
*ISSN 1391-958X*

**அட்டைப்படம் பற்றிய வர்ணனையும் சுருக்கமான பதிவும் :**

கடற்பேரலையால் இடம்பெயர்ந்து பருத்தித்துறை கிறிஸ்தவ தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த ஒரு குடும்பம்

**அட்டைப்படம்**

சேபாலி கோட்டெகொட

**இறுதிக் கண்ணோட்டம்**

சர்வம் கைலாசபதி
பவித்ரா கைலாசபதி

**மொழி பெயர்ப்பு**

நிரஞ்ஜலா அருள்நண்தி
லவனி செல்வநாயகம்
பொன்னையா சாந்தகுமார்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**

வேலாயுதம் ஜெயசித்ரா

**புத்தக வெளியீடு**

பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு
20/1, 8ம் ஒழுங்கை, நாவல, இலங்கை
தொலைபேசி 00-94-112805127, 2805579 தொலைநகள் : 00-94-112805580
மின்தபால் womedia@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. NIRO



# நாம் சொல்ல விரும்புவது.....

இது 2005 ஆம் ஆண்டில் வெளியாகும் சொல்லின் முதலாவது இதழாகும். இலங்கை சரித்திரத்தில் மிகவும் கொடூரமான இயற்கை அழிவின் வேதனைகளையும் அழிவுகளை சுமந்த வண்ணம் 2005 ஆண்டு மலர்துள்ளது. நாடு முழுவதுமான சுமார் நாற்பதாயிரம் உயிர்களைப் பலிகொண்ட கடல் பெருக்கு சுமார் எட்டு இலட்சம் மக்களை இடம் பெயரச்செய்தது.

கடற்கோள் இடம்பெற்று மூன்று மாதங்கள் பூர்த்தியடைந்துள்ளன. நாடெங்கிலும் உலகெங்கிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் மனிதாபிமான சிந்தனையுடன் பாதிப்படைந்தவர்களுக்கு உதவினர். இனமத பேதங்களுக்கு அப்பாற்பட்டு செயல்பட்டிருந்தமை விசேடமாக குறிப்பிடத்தக்க அம்சமாகும். யுத்தத்தால் துன்பத்தை அனுபவித்த வடக்கு–கிழக்கு மக்களை கடற்கோள் பாதித்ததும் தென்னிலங்கை சிங்கள மக்கள் அவசர நிவாரணங்களை எடுத்துக்கொண்டு வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் முஸ்லிம் மக்களை சென்றடைந்தமை உண்மையில் யுத்தம் புரிகின்ற, யுத்தத்தை வேண்டிநிற்கும் இனவாத அரசியல்வாதிகளுக்கும் இனவாத சக்திகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது. எனினும் சாதாரண குடிமக்களின் இந்த கூறுணர்ச்சியும் மனிதாபிமான மற்றும் சகவாழ்வு உணர்வுகளை அதற்கு அப்பால் நிலைத்து நிற்கக்கூடிய சூழலொன்று கட்டியெழுப்பும் வரை முன்கொண்டு செல்ல வழிகாட்டக்கூடிய சமூக அல்லது அரசியல் சக்தியொன்று இல்லாமை துரதிஸ்டவசமாகும்.

கடற்கோள் ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள போதிலும் இடம்பெயர்ந்தவர்களில் அநேகமானொர் இன்றும் அகதிமுகாம்களிலும் அதற்கு வெளியிலும் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர். விசேடமாக இங்கு பெண்கள் அனுபவிக்கும் துயரங்களை எடுத்துக்காட்ட வேண்டும். தனித்துவத்தை பறிகொடுத்து பாதுகாபற்ற நிலைமையினுள் வாழ வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கணவனை அல்லது பெற்றோரை பறிகொடுத்த துயருடன் தமது வீடுவாசல்களையும் சீவனோபாயத்தையும் இழந்து வாழும் பெண்களுக்கு முகாம்களினுள்ளும் வெளியிலும் போதிய பாதுகாப்பு மற்றும் மன அமைதி கிடைக்காத பல சந்தர்ப்பங்கள் உள்ளன. முகாம்களை அண்டிவாழும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்த பெண் அமைப்புக்கள் இதுபற்றி எடுத்துக்கூறிய சந்தர்ப்பங்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் அவ்வாறான எதுவும் இந்த முகாம்களை சார்ந்ததாக அல்லது சமூகத்தினுள் இடம்பெறுவதில்லையென தெரிவித்துள்ளனர். எனினும் இப்பெண்கள் வசிக்கும் முகாம்களை அண்டியதாக பணியாற்றும் மகளிர் குழுக்களின் அறிக்கைகள் பிரகாரம் அத்தோடு மேற்கொண்ட விஜயங்களின் போது எங்களை சந்தித்த பெண்களது கருத்துக்களின்படி பெண் என்ற ரீதியில் அவர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை. பலவகையான பாலியல் சேட்டைகள், வன்முறைச் சம்வங்களுக்கு உள்ளாகும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் பெற்றோரை இழந்த பெண் பிள்ளைகளின் நிலையும் பாதுகாப்பற்றதாக உள்ளது. கிடைக்கும் நிவாரணங்களை விற்று மதுவை விலைக்குவாங்கும் ஆண்கள் காரணமாக நிர்க்கதியாகியுள்ள பெண்களை எமக்கு அகதிமுகாம்களிலும் சமூகத்திலும் காண முடிகிறது.

அகதியே வாழ்க்கை என்ற நிலைக்கு ஆளாகாது இப்பெண்களுக்கு அவர்கள் மேற்கொண்ட சீவனோபாயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கைகொடுப்பது யார்? நிவாரணம், கடனுதவிகள் அத்தோடு அரசினால் பெற்றுக்கொடுக்கப்படவுள்ள காணிகளில் குடியிருப்புக்களின் உரிமையாளர்களாவதற்கு இவர்களுக்கு முடியுமா? விசேடமாக வடக்கு–கிழக்கு மாகாணங்களில் காலாகாலமாக பெண்களுக்கென கிடைத்திருந்த காணி உரிமைக்கு இப்புதிய காணி வழங்கும் முறையினால் சவாலை எதிர்கொள்ள நேரிடுமா? இவை எம்மத்தியிலுள்ள பிரச்சனைகள் எனலாம்.

கொள்கைகளை வகுக்கும் அரச கட்டமைப்பினுள் பெண்களின் பங்களிப்பு போதியளவு இல்லாமை மற்றும் ஆண்–பெண் சமூக அந்தஸ்திற்கு கூறுணர்ச்சிகொண்ட தொலை நோக்கும் செயல்பாடும் இல்லாமை கவலைக்குரிய விடயமாகும். எனினும் கடற்கோள் புனருத்தாபன வேலைத் திட்டங்களினுள் விசேடமாக மீள்குடியமர்வு செய்தல் தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும்போதும் சீவனோபாயம் தொடர்பில் முடிவுகளை எட்டும்போதும் பெண்களின் முழுமையான பங்களிப்பை ஏற்படுத்தும்பொருட்டு கொள்கை அடிப்படையிலான திட்டங்களை வகுக்கும் கட்டமைப்புக் குறித்து வலுவான அழுத்தத்தை கொடுக்கும் செயற்பாடொன்றை கட்டியெழுப்புதல் இன்று எம்மத்தியிலுள்ள மிகப்பாரதுரமான பொறுப்பு என்பதை தெரிவிக்க விரும்புகிறோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் விடுக்கும் அறைகூவல்!

2004 டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தம் காரணமாக பல்வித அல்லல்களுக்கும் துயரங்களுக்கும் இலக்கான பெண்கள் வாழ்க்கையின் பல்பரிமானக் கோணங்கள் தொடர்பான சம்பவங்களை 2005ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில், சொல் உங்களுடன் பரிமாறிக்கொள்கின்றது. உயிர்களைக் காவுகொடுத்த பல்லாயிரக்கணக்கானவா்களுக்காக அழுதுபுலம்புபவர்களுடன் சோகத்தில் பங்குகொண்டும், உயிர்பிழைத்தவர்கள் கௌரவமாக அவர்களது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளும் பிரயத்தனங்களுக்கு ஆசிவழங்கியும், உதவியும், கடற்கோள் அனர்த்தத்தின் பின் எம்மை நோக்கி வந்த பாரிய சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களைப் பகுத்தாய்வு செய்தவண்ணம் நாம் புதிய ஆண்டில் கால் பதித்துள்ளோம்.

இலங்கையின் சரித்திரத்தில் இதுவரையில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளில் அதிகளவான உயிரிழப்பையும் சொத்திழப்பையும் ஏற்படுத்திய கடற்கோள் விசேடமாகப் பெண்களைப் பாதித்துள்ள மற்றும் பாதிக்கும் விதம் குறித்த பலவாறான தகவல்களை இம்முறை சொல் வெளியிடும் கட்டுரைகளிலிருந்து பெறலாம். மரமேறுதல், நீந்துதல் போன்ற ஆற்றல்களை விருத்தி செய்யாமை மற்றும் அரைநிர்வாணத்துடன் பகிரங்கமாக வெளிப்படுவதற்கு கட்டுப்பாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளல் போன்ற ஆணாதிக்கவாத சமூக விழுமியங்கள் காரணமாக மரணத்தை தழுவிய பெண்கள் பற்றி சொல்லப்படும்போது எமக்குள் எழும் கோபத்தையும் கவலையையும் எவ்வாறு நடுநிலைப்படுத்தப் போகின்றோம்? பெண்கள் குறித்து இதுதான் என தீர்மானிக்கப்படும் காலம். தாழ்த்தப்பட்ட சமூக சிந்தனைகளுக்கு சவால் விடுக்க இப்போதேனும் மனைவியரையும் சகோதரிகளையும். தாய்மார்களையும் இழந்து நிற்கும் இலங்கையின் புருஷர்கள் சிந்திப்பார்களா? ஆண்-பெண் சமூக அந்தஸ்து காரணமாக பெண்ணுக்கு உரித்தாகவும் வரையறுக்கப்பட்ட பிரபஞ்சத்தில் அவளுக்கு இறப்பைக் கொண்டுவரும் காரணிகள் புதைந்துள்ள-தென்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

கடற்கோளுக்குப் பின்னர் எழுந்துள்ள பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்விலிருந்து வடக்கு-கிழக்கில் அல்லது தெற்கில் மேற்கொள்ளப்படும் பல செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட நபருடன் கலந்தாலோசிக்காது நடைபெறுகின்றமை தெளிவாகின்றது. திடீர் விபத்தொன்று நிகழ்ந்து இரண்டு மூன்று வாரங்கள் கடந்த நிலையில்கூட உடனடி நிவாரணங்கள் மற்றும் உதவிகளை வழங்கும்போது ஓரளவிற்கேனும் கருத்தறிதல் கடினம் என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பினும் மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில் எதிர்காலத்து குடியிருப்புக்கள் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பில் கடற்கோளால் பாதிக்கப்பட்டவர்களின் விருப்பு-வெறுப்புக்களை கேட்டறிதல் சனநாயகவாத சமூகமொன்றின் அடிப்படை கோட்பாடாகும். பெண்களின் இல்லத்து தலைமைத்துவம் மற்றும் தன்னாட்சிகொண்ட நலனை ஏற்க விரும்பும் சமுதாயமொன்றில் பெண்களின் வீட்டு, காணி உரிமை தொடர்பாக பாரதூரமான பிரச்சனைகள் தோன்றுவதற்குள்ள வாய்ப்புக்கள் அதிகம். அத்தோடு தமது குடும்பத்தின் எதிர்காலம் குறித்து ஈடுபாடுகொண்டுள்ள பெரும்பான்-மையான பெண்களிடம் கருத்துக்களை கேட்டறியாது மீண்டும் கட்டியெழுப்பப்படும் குடியிருப்புக்கள் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் இம்மக்களுக்கு பலன்தரக்கூடிய நீண்டகாலத் தீர்வுகளாக அமையுமா?

தண்ணீர், சுகாதாரா ஏற்பாடுகள், பாடசாலை, வைத்தியசாலை மற்றும் போக்குவரத்து சேவைகளுக்குள் உள்ள தொடர்பு போன்றவிடயங்களை முதலாவதாகக்-கொள்ளாது எடுக்கப்படும் தீர்மானங்களுடன் இப்பெண்கள் உடன்பட முடியுமா? கடற்கோளுக்குப் பிற்பட்ட நடவடிக்கைகள் மக்களின் பங்களிப்பைப் பெறாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கப்படுவது தொடர்பாக பரந்துபட்ட சிவில் சமூக செயற்பாடுகளின் தேவை பலமாக உணரப்படுகின்றது. இதற்காக எம்மால் மக்களின் ஒரு சக்தியை வழிநடத்த முடியுமா?

மார்ச்சு மாதத்தில் பெண்களது வாழ்க்கை குறித்து தீர்க்கமான பங்கை செலுத்தும் வகையில் நடைபெற்ற இரண்டு மூன்று சம்பவங்கள் குறித்து கட்டாயமாகச் சுட்டிக்காட்ட வேண்டும். இலங்கையில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக பேசப்பட்ட விடயங்களின் பலனாக மகளிர் விவகார அமைச்சினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இல்லத்து வன்முறைகள் தொடர்பான சட்டமூலம் பல விமர்சனங்களுக்கு மத்தியில் மீண்டும் குறித்த அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இல்லத்து வன்முறைகளுக்கு இலக்காகும் பெண்களுடன் குடும்பத்தில் நிலவும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யும் பணிகளில் பல வருட அனுபவமுள்ள சமய மற்றும் சமூக அமைப்புகள் பலவற்றுடன் கலந்துரையாடி மலேசியா, வியட்நாம் போன்ற நாடுகளில் காணப்படுகின்ற சட்ட வாக்கத்துறையைத் தழுவி வகுக்கப்பட்ட இச்சட்டமூலத்தை பொதுச் சமூகத்திற்கு அத்தியவசியமான ஓர் விடயமாகக் கருதாது கைவிடப்பட்டது. இதிலிருந்து எமக்கு மீண்டும் ஒருமுறை எங்கள் சமூகத்தினுள் உயர் மட்டத்தில் பெண்களின் பிரச்சனைகள் தொடர்பில் காணப்படும் கவனக்குறைவு தெளிவாகிறது. இல்லத்தினுள் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் காரணமாக பெண்களுக்கு ஏற்படும் உள, உடல் ரீதியான வடுக்கள் மற்றும் அவளது பொருளாதார பங்களிப்பிற்கு ஏற்படும் தடைகள் அத்தோடு பிள்ளைகள் குறித்து ஏற்படும் முரணான தாக்கங்கள் தொடர்பாகப் போதுமான காரணிகள் இருந்தபோதும் அந்த யதார்த்தத்திற்கு முகம் கொடுக்காது பின்வாங்குதல் என்பது இலங்கையை மேலும் அடிமை யுகத்திற்குள் தள்ளிவிடுகிறது.

**கடற்கோள் அனர்த்தத்தில் சிக்குண்ட பெண்களின் கூக்குரலுக்கு செவிசாய்க்குமாறு நிர்வாகிகளை எவ்வாறு வலியுறுத்துவது? பெண்களை விசேடமாகப் பாதிக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக நிற்றல் நவநாகரீக சமுதாயத்தின் மிகச்சிறந்த ஓர் அடையாளமென்பதை மந்திரிமாருக்கு எவ்வாறு எடுத்துக்காட்ட முடியும்? கடற்கோளுக்கு பின்னான நிவாரண நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்படும் இயந்திரத்தை இந்நாட்டின் இனப்பிரச்சனை யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்பதை அரசு மற்றும் விடுதலை புலிகள் அமைப்பு அடங்கலான ஏனைய தரப்பினருக்கு எவ்வாறு எடுத்துக்காட்ட முடியும்?**



இலங்கையினுள் நிலைமை இவ்வாறிருக்கையில், உலகம் எதைச் சொல்கிறது? 1995ஆம் ஆண்டு பீஜிங் நகரில் இடம்பெற்ற நான்காவது உலக மகளிர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டத்தின் பத்தாண்டு பூர்த்தியையொட்டி உலகெங்கும் நடை பெற்ற பல்வேறு கூட்டத்தொடர்களின் உச்சக்கட்டமாக மார்ச்சு மாதத்தின் முதல் வாரத்தில் நியூயோக் நகர பீஜிங் கூட்டத்தொடரைக் குறிப்பிடலாம். அதிலும் கடந்த தசாப்த காலமாக உலகத்தின் பல்வேறு நாடுகளில் பெண்கள் தமது சுயாதீனத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் மேற் கொண்ட போராட்டங்களின் பெறுபேறுகளை நிராகரித்து, தீர்மானம் எடுக்கும் அவளின் உரிமைக்கு முட்டுக்கட்டைகளை தோற்கடிப்பதற்கு பல்வேறு நாடுகள் முயற்சித்தது எனினும் அதன் தொடர்பாக மேற்கொண்ட விவாதங்களின் ஊடாக அமெரிக்காவின் அழுத்தத்தின் வகையை அறிந்துக்கொள்ள முடிந்தது.


நிலைமைகள் இவ்வாறிருக்கும் போது இலங்கையிலும் உலகத்திலும் சனநாயகவாத கோட்பாடுகளை நிலை-நாட்டும் சவால் எம்மைச் சார்ந்துள்ளது. கடற்கோள் அனர்த்தத்தில் சிக்குண் பெண்களின் கூக்குரலுக்கு செவிசாய்-க்குமாறு நிர்வாகிகளை எவ்வாறு வலியுறுத்துவது? பெண்களை விசேடமாகப் பாதிக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக நிற்றல் நவநாகரீக சமூகத்தின் மிகச்சிறந்த ஓர் அடையாளமென்பதை மந்திரிமாருக்கு எவ்வாறு எடுத்துக்காட்ட முடியும்? கடற்கோளுக்கு பின்னரான நிவாரண நடவடிக்கைகளுக்காக உருவாக்-கப்படும் இயந்திரத்தை இந்நாட்டின் இனப்பிரச்சனை யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் உருவாக்-கப்பட வேண்டும் என்பதை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பு அடங்கலான ஏனைய தரப்பினருக்கு எவ்வாறு எடுத்துக்காட்ட முடியும்? உலகம் முழுவதும் வியாபித்துச் செல்லும் யுத்த மயமாக்கல் மற்றும் எதிர்தரப்பு சக்திகளுக்கு எதிராக பெண்ணின் உரிமை தொடர்பான குரல் எவ்வாறு ஒலிக்கும்?. இந்த சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வலிமையை பெற்று 2005ல் தடம்பதிப்போம். ■

**சுனிலா அபேசேகர**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்துக்கொள்...



பௌர்ணமி நிலாவொளி
அலங்கரிக்கும் நாளை வயலை
என்றாலும் மார்கழி குளிர்
மகனே கண்தூங்கு
என் மடியில்.....
அப்பா வந்திடுவார்
நாளை விடியலில்....
இன்று இரவும்
கடலுக்குச் செல்லவோ
வேண்டாம் போக வேண்டாம்
"அது என் தொழில்
உங்களை காப்பாற்ற வேண்டுமல்லவா
வாருங்கள் தோழர்களே
கடலுக்குச் செல்வோம்....."

நான் வழிமறிக்கவில்லை

அதோ....
ஆழி மிகவும் உயர்ந்தது
அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரம் வேண்டாம்
விளையாட்டு வேண்டாம்......
அதோ
கடல், கொடுத்த அனைத்தையும்
எடுத்துச்சென்றுவிட்டது
அவற்றை மட்டுமல்லாது.....
கடவுள் தந்த கணவனையும் குழந்தைகளையும்
எடுத்துச்சென்றுவிட்டது
எஞ்சியது இதுதான்
இதோ....
இந்த கஞ்சத்துணியையும் பறிபோகிறது
எடுத்துக்கொள்....
புத்தன் ஒருவன் இங்கில்லை
ஆனால் நான் பட்டாச்சாராவும் இல்லை
பறிக்க முடியாதடா உனக்கு
என் மனத் துணிவை.....

**எஸ். ரூப்பிக்கா நிரஞ்சலா**
**அத்தநாயக்கா**
சமூகவியல் பீடம்
களனி பல்கலைக்கழகம்

* பட்டாச்சாரா : பௌத்த கதை ஒன்றில் தனது கணவன் மற்றும் இரண்டு குழந்தைகளை பறிகொடுத்தப் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பு

கடற்பேரலைகள் வீடுகளையும் வாசல்களையும் சின்னாபின்னமாக்கி ஈன இரக்கமே இல்லையென்பதை நிரூபித்துவிட்டன. எனினும் ஒரு கணப்பொழுதில் எம்நாட்டிலுள்ள ஏனைய மக்களின் இதயங்களில் இப்பேரழிவிற்கு இரையாக்கப்பட்டவர்கள் குறித்து கருணை உருவானது. நாங்கள் தகவல்கள் தெரிந்துகொள்வதை மிகத்துரிதமாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால் அழிவிற்குள்ளான பிரதேசங்களிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் சிலருடன் தொடர்புகொண்டோம். அநேகமானோர் ஒரு சொல்லேனும் கதைக்க தயவுகொள்ளாத அதேவேளை ஹிக்கடுவை பிரதேச செயலாளர் எவ்வித தயக்கமும் இல்லாமல் மிகுந்த தயவுடன் அதற்கான நேரத்தை ஒதுக்கித்தந்தார். அதற்காக அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்களுடன் கலந்துரையாடுவதைவிட சுதந்திரமாக சிந்திக்கக்கூட நேரம் இடம் இல்லாததால் விகாரைக்கு போவோம் என அன்புடன் கேட்டார். பேரலையால் அடித்துச்செல்லப்பட்ட புகையிரதம் மீண்டும் தண்டவாளத்தின் மேல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நாங்கள் பதுமகம்மாராமயவிற்கு சென்றோம். அங்குள்ள தேரர்களுக்கு தானமும் இல்லை. வெளியே ஓர் அடுப்பை மூட்டி தாங்களாகவே சமைக்கின்றார்கள். எமக்கு தேனீர் தந்து உபசரித்தார்கள். அடுப்பிலிருந்து வெளிக்கிளம்பும் புகைமண்டலமும் தூசி மண்டலமும் நாலாபக்கங்களிலும் கிளம்பி வருகின்றபோது உடைந்துபோன கதிரையின் மேலமர்ந்து எங்களுடன் கதைக்க ஆரம்பித்தார். இந்தக் குறிப்பு ஹிக்கடுவை பிரதேச செயலாளர் திருமதி குசும் பியரத்தன அவர்களுக்கு காணிக்கையாகவே சமர்ப்பணம் செய்கின்றோம்.



# கடற்கோளே நீ தோற்றுவிட்டாய்

நாங்கள் உச்சிவெயில் பொழுதில் ஹிக்கடுவையை நெருங்கியபோது அவர் இடம்பெயர்ந்தவர்களுடன் பராலிய ஜினரத்தன மகாவித்தியாலய அகதிமுகாமில் இருந்தார். எமக்கு அவரோடு கலந்துரையாடுவதற்கோர் இடமிருக்கவில்லை. எல்லா இடங்களும் ஒரே தூசி மண்டலமாக இருந்தன. அங்குமிங்கும் நடந்துதிரியும் மதுவருந்திய நபர்கள் ஒருபக்கம். சொல்லப்போனால் இந்தியாவின் விசாலா மாநகரத்தில் ஏற்பட்ட முப்பீதிகள் போன்றாகும். ஹிக்கடுவை... வெளிநாட்டவர்களின் மனங்களைக்கவர்நத்த ஹிக்கடுவை... இன்று அழிபாடுகள் நிறைந்த ஒரு கிராமம். வெளிநாட்டவர்களுக்கும் எமது இளம் பருவத்தினருக்குமிடையே அநேக கதைகள் உள்ளன. வெள்ளைக்காரப் பெண்கள் அரைநிர்வாணத்துடன் சூரிய வெளிச்சத்தில் உலாவிய கிராமம் ஹிக்கடுவை.

தவுடுபொடியாக்கக்கப்பட்ட வீடுகள், கடைகள், சுற்றுலா ஹோட்டல்களின் அழிபாடுகள் மற்றும் ஆழ்கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட படகுகளின் அழிபாடுகள் மீண்டும் கரையோரத்திற்கும் வீதியோரத்திற்கும் இழுத்து வரப்பட்டுள்ளன. கிராமத்தையே தூக்கி நிலத்தில் அடித்ததுபோல ஆழி அதன் வீரத்தை காட்டித்தற்போது மனதில் அலைகளை எழுப்பி தான் பிடித்துக்கொண்ட புதிய நிலப்பரப்பில் முட்டிமோதி மீண்டும் உட்செல்லுகின்றன.

நாங்கள் அவரை சந்தித்தோம். அவர் ஹிக்கடுவை பிரதேச செயலாளர் திருமதி குசும் பியரத்தன. அப்பொழுது திருமதி பியரத்தன பராலிய ஸ்ரீ ஜினரத்தன வித்தியாலய அகதி முகாமில் ஓர் அமைச்சருடன் கலந்துரையாடிக்கொண்டிருந்தார். அக்கலந்துரையாடல் நிறைவு பெறும்வரை நாங்கள் அருகிருந்த வகுப்பறை வரிசைகளின் பக்கம் நகர்ந்தோம். வகுப்பறை வரிசைகளுக்கு தொலைவிலுள்ள முத்தத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த கடல் நீரில் அகப்பட்ட கதிரைகளின் குவியல் மட்டுமே அப்பாடசாலை அவ்விடத்தில் அமைந்திருந்தமைக்கு சான்றாக விளங்கின. நாலைந்து வெளிநாட்டவர்கள் இந்த வகுப்பறைகளுக்கான கதவுகளை பொருத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். மிக அதிக வெய்யிலாக இருந்த பகற்பொழுதில் கடலிலிருந்து வீசும் வறண்ட காற்றினால் நொருக்கிக்கிடந்த கட்டிடங்களிலிருந்து எழுந்த தூசியானது தொண்டையை வறட்டியபோது அவர்கள் தண்ணீர் போத்தல்களை வாயில்வைத்து குடித்தபடி பணியில் ஈடுபட்டனர்.

இது அகதிமுகாம் அமைந்துள்ள நிலப்பரப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு அயலிலுள்ள வளவில் விகாரை அமைந்துள்ளது. பாடசாலையையும் விகாரையையும் வேறுபடுத்திக்காட்டும் எல்லைகள் தற்போது இல்லை. கடல் அலைகள் எல்லைகளை தகர்த்தெறிந்து வெகுதூரம் சென்று மீண்டும் வந்தவழியே சென்றுள்ளன. விகாரையில் பௌத்த சிலைகளும், தேரர்களின் வாசஸ்தலத்தின் சுவர்கள் மற்றும் அரச தளமேடை மட்டுமே எஞ்சியிருக்கின்றன. கலந்துரையாடலை முடித்துக்கொண்ட திருமதி குசும் பியரத்தன எம்மிடம் வந்தார்.

இது ஒரு புதிய முகாம். முன்னர் இவ்விடத்திற்கு வந்தவர்கள் இன மத பிரச்சனைகளையே கொண்டுவந்தார்கள்' அவர் தெரிவித்தார்.

அவர்களுடைய இனமத பிரச்சனைகள் இதுவரையும் தோற்றதாக இல்லை. நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம் பெண்களும் ஆண்களும் ஒரு வேலையும் இல்லாது அங்குமிங்கும் நடந்தவண்ணம் வெற்றுப்பேச்சுக்களில் காலத்தைக் கடத்துகின்றார்கள். அங்கு வேலை செய்துகொண்டிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க ஆணி, உளி, பலகை போன்ற உபகரணங்களைக்கூட எடுத்துக் கொடுக்குமளவிற்கு அவர்களின் கரங்கள் உயரவில்லை.

'அன்று திசெம்பர் 26 எனக்கு சில கடமைகள் இருந்தன. எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நானும் எனது கணவரும் அம்மாவும் தம்பியும் இருந்தோம். அன்றைய தினம் அதிகாலை சுமார் ஆறு மணியளவில் அம்மா ஹோமாகமவில் வசிக்கும் எனது அக்காவின் வீட்டுக்குச் செல்ல புறப்பட்டார். காலை ஆகாரத்திற்கென சமைத்த நூடில்ஸ் மற்றும் மின்கனலடுப்பில் உலை வைக்கப்பட்டிருந்த சோறும் சமையல் அறையில் அப்படியே இருந்தன. எனக்கு அவசர அவசரமாக வெளியே செல்ல வேண்டியிருந்தது. காலை 8.20 மணியளவில் நானும் எனது கணவரும் வீட்டைவிட்டு வெளியேறினோம். காலை உணவை உண்ணக்கூட நேரம் இருக்கவில்லை. எனக்கு சமுர்த்தி செய்திட்டத்தின் மிகச்சிறந்த சமுர்த்தி குழுவை தெரிவு செய்வதற்காக செல்லவேண்டியிருந்தது. அத்தோடு மேலும் ஒரு சிறுவர் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கும், பிற்பகல் 2 மணிக்கு மரணச்சடங்கு ஒன்றிலும் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. சமுர்த்தி பணிகளை நிறைவு செய்துவிட்டு மரணச்சடங்கிற்கு செல்ல நேரம் போதாததால் புகைப்படக்கருவியை எடுப்பதற்காக வீட்டிற்கு வரத்திரும்பினேன். மக்கள் ஒன்றாக அலறியடித்துக்கொண்டும் புலம்பிக்கொண்டும் ஓடுகின்றனர். கடல் பெருக்கெடுத்துவிட்டது. வாகனத்திலிருந்து இறங்கி மக்களை உயர்ந்த பிரதேசங்களை நோக்கி போகும்படி கத்திக்கூறி எல்லா இடத்திற்கும் நடந்தேன். காலடி வைக்கவும் கடினமாக இருந்தது.

பெருக்கெடுத்துவந்த கடல் நீரில் எண்ணெய்த்தன்மை சார்ந்திருந்ததோடு வழுவழுப்பாகவும் இருந்தது. ஏற்கனவே தெரிந்த நபர்களின் பூதவுடல்களை தாண்டித்தாண்டி உயிருடன் இருப்பவர்களைத் தேடினேன் தூக்கி எடுக்கும்போது உயிர் பிரிந்துவிட்டது. உடல்கள் வெண்நிறமாயின. ஓரளவு வீக்கம் காணப்பட்டது. செய்வதற்கு ஒன்றுமில்லை. இவையெல்லா பூதவுடல்களுக்குமான சவப்பெட்டிகளை எங்கிருந்து பெறுவது? அந்தந்த நபர்கள் முடிந்தளவில் பூதவுடல்கள் ஒரே குளியில் தொகையாக புதைத்தனர். உயிர் எஞ்சியுள்ளவர்கள் ஆரச்சிகந்தை, பட்டபொல போன்ற வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

> **"பெண் என்ற காரணத்தால் வருத்தம் உணரப்பட்டதெனக் கூறமுடியாது. அச்சந்தர்ப்பத்தில் இப்பேரழிவிற்கு முகம்கொடுப்பது என்ற சிந்தனை மட்டுமே இருந்தது."**

ஒரு பெண் என்ற ரீதியில் உங்களுக்கு இந்நிலைமைக்கு முகம்கொடுக்க நேர்ந்ததில் கூடிய வருத்தம் உணரப்பட்டிருக்கும்'

இல்லை.... இங்கு பெண் என்ற காரணத்தால் வருத்தம் உணரப்பட்டதென கூறமுடியாது. அச்சந்தர்ப்பத்தில் இப்பேரழிவிற்கு முகம்கொடுப்பது என்ற சிந்தனை மட்டுமே இருந்தது. அதாவது அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்பது மட்டுமே என்றால் சரியானது. பராலிய மற்றும் தெல்வத்தைக்கு இடையில் நடைபெற்ற புகையிரத விபத்தும் திருமதி குசும் பியரத்தன அவர்களின் செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. எனினும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் அவருக்கு பொறுப்பானதல்ல.

'யாருக்குத்தான் அந்த மரண ஓலத்தை கேட்டுக்கொண்டிருக்க முடியும்? புகையிரத்திற்குள் அகப்பட்டவர்களை காப்பாற்ற வேண்டும் எனினும் யார்தான் முன்வருவார்கள்..... நான் தனியார் தொலைக்காட்சி ஒன்றுடன் தொடர்பு கொண்டு ஏதாவது செய்யுமாறு தெரிவித்தேன். மேலாக வந்த இந்த மக்களை காப்பாற்றுவது பற்றி பொறுப்புவாய்ந்தவர்களுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டும் அவற்றுக்கு சாதகமான பிரதிபலன் கிடைக்கவில்லை' இறுதியில் எல்லாவற்றிற்கும் ஊர்மக்களே உதவி செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் உங்களுடைய குடியிருப்பைப்பற்றி கவனிக்க வில்லையா'

'கவனித்தேன். இங்கிருந்த கடமைகளையெல்லாம் ஒழுங்கு செய்துவிட்டு வீட்டுக்குச் சென்றுபார்த்தேன். அங்கு ஒன்றுமே எஞ்சவில்லை. பெருங்கடலானது வீட்டை ஆக்கிரமித்து பின்னர் வெளியேறியதும் கொள்ளையர்கள் வீட்டிலிருந்த பொருட்களுக்கு பொறுப்பானவர்களாகி-விட்டார்கள். எனக்கும் என்னுடைய கணவருக்கும் நாங்கள் அணிந்திருந்த உடைகள் மட்டுமே சொநதம் என்றாயிற்று. நீர் பெருக்கெடுத்ததால் உயிரைக் காப்பாற்ற வீட்டைவிட்டு ஓடிய என் தம்பி நள்ளிரவு 2 மணியளவில் மீண்டும் வீடு திரும்பினார். எனக்கும் அவருக்கும் ஒன்றுமே இருக்க இல்லை. இரு நாட்களின் பின் எனது நண்பர்கள் உடுதுணிகளைக் கொண்டுவந்தார்கள். நான் தற்போது அணிந்திருப்பது எனது சிநேகிதி ஒருவரின் சீலை. எனது கணவர் தேசிய சேமிப்பு வங்கியின் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பணியாற்-றுகின்றார். அவருக்கு இருவாரங்களுக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறித்து வங்கியின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எனது நன்றிகளை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அவருக்கு கடமைக்குச் செல்ல நேர்ந்திருக்குமானால் என்னால் இந்த கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்வதில் கடினத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்குமல்லவா....?'

குசும் அவர்களுக்கு வசிப்பதற்கு ஒரு இடமில்லை. உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் இல்லை. தற்போதைக்கு அவர்களின் வாசஸ்தலம் சில்விய சிறுவர் விடுதி என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு உணவு தயார்செய்யப்படுவதால் பிரதேச செயலாளர், கணவரது உணவுப் பிரச்சனை நிவர்த்தி செய்யப்பட்டாலும் உரிய நேரத்திற்கு உணவு கிடைப்பதில்லை. ஒரு நாளுக்கு ஒருவேளை உணவு. அதாவது மாலை ஆறுமணிக்கு கொஞ்ச நேரம் கிடைத்தாலும் நிம்மதியாக அதனை சாப்பிட முடியாது. உரிய நேரத்திற்கு உணவு உண்ணாத காரணத்தினால் அவர் வயிற்றுப்பொருமல் (Gastritis) வருத்தத்தால் அவதிப்படுகிறார். அதிக வேலைப்பளு காரணமாக அவரின் களைப்பை எங்களால் காணமுடிந்தது.

'கடற்கோளின் பின்னர் உங்கள் அலுவலக பணிகள் எல்லாம் எவ்வாறு நடைபெறுகின்றது?'

"முதலில் எனக்கு என்னுடைய பணிகளை ஒரு மரத்தின்கீழே தொடரவேண்டிய நிலையேற்பட்டது. பின்னர் நந்தனாராமய விகாரையில் ஓர் இடம் கிடைத்தது. தற்போது பிரதேச செயலகம் துப்பரவு செய்யப்பட்டுள்ளதால் அங்கு போய் எனது பணிகளைத் தொடர முடிந்துள்ளது....."

எனினும் அவர் அவ்விடத்தில் எவ்வாறு பணியாற்-றுகிறார் என்பதையிட்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம். அவரிடம் கடிதங்களை கையளித்து அதற்கான அனுமதியை பெறுவதற்கு வந்துள்ளவர்களது வரிசை ஒருபக்கமும் அதே இடத்தில் கிராம உத்தியோகத்தர் அலுவலகமும் இருக்கின்றது. அவர்களுக்கு பிரச்சனை இல்லையென்று கூறமுடியாத அதே பட்சத்தில் உண்டெனவும் கூறமுடியாதுள்ளது. பிரதேச செயலக கட்டிடத்தில் அவருக்கு ஒரு சிறிய அறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> " ஆரம்ப நாட்களில் 48 முகாம்கள் இருக்கையில் பருவப்பெண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் நிம்மதியாக இருக்க இடமளிக்கவில்லை. எனினும் நாங்கள் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தோம். "

ஒதுக்கப்பட்டுள்ளது. பல கிராமத்தவர்கள் வெவ்வேறுபட்ட பிரச்சனைகளுடன் மிகவும் குழப்ப நிலையில் கடிதங்களை கரங்கள் ஏந்தியபடி அவர் நோக்கிக்கொண்டிருக்கின்றனர். தொலைபேசியோ அவ்வப்போது குரல்கொடுத்த வண்ணமுள்ளது. ஒரு இடத்தில் மட்டுமல்ல பிரச்சனை எல்லா இடங்களிலும் பிரச்சனைதான்.

முதல் கட்டமாக என்ன செய்ய வேண்டும்?

நான் ஏற்கனவே மத்துகமவில் பணியாற்றிவந்தேன். இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் மஹிந்த சமரசிங்ஹ அமைச்சர் அவர்கள் தொலைநகல் ஒன்றின் மூலம் எனக்கு இவ்விடமாற்றத்தை வழங்கியிருந்தார். அன்று முதல் இன்றுவரை நான் தேவையான பணியாட்தொகுதியினரை பெற்றுத்தருமாறு கேட்டுவருகின்றேன். வழமையான வாரநாட்களில் இப்பணியாட்தொகுதியினரைக் கொண்டு கடமையாற்றுவதில் சிரமங்கள் காணப்படுகின்ற அதேவேளை தற்போது ஏற்பட்டுள்ள கடற்பேரலையினால் ஏற்பட்டுள்ள பேரழிவுகளை உத்தியோகபூர்வ மட்டத்தில் நான் எவ்வாறு எதிர்கொள்வது என்பதை ஊகிக்க முடியுமல்லவா? நான் விரக்தியடைந்துள்ளேன். முடிந்தளவு முடியுமானதை செய்வேன்.....'

'தன்னுடைய அனைத்து சொத்துக்களையும் இழந்து பின்னரும் சிறுவர் விடுதியொன்றில் தற்காலிகமாக தஞ்சமிருந்துகொண்டு ஹிக்கடுவை பிரதேச செயலாளர் மேற்கொள்ளும் இவ்வளப்பரிய சேவைக்கு பாராட்டு கிடைக்குமா?'

'எனக்கு பாராட்டுத் தேவையில்லை. இப்பணிகளை சிறப்பாக தொடர தேவையான பணியாட்தொகுதி கிடைக்குமானால் அதுவே போதுமானது.'

குசும் பியரத்தன இவ்வாறு தெரிவிக்கின்றார்

'பிரதேச செயலாளர் என்ற வகையில் இப்பயங்கர அழிவில் அளவு கடந்த சோகத்தில் அவர் இந்நிலையை எதிர்கொண்டவிதம் அதனை தான் பொறுப்பேற்ற விதம் பற்றி நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.'

'வரிசையில் வருபவர்கள் கையளிக்கும் கடிதத்தை நோக்கிக்கொண்டிருக்கும் அவர் திடீரென தலையை உயர்த்தி ஐயா ஏன் இங்கே? என கேள்வி எழுப்புகிறார். வயோதிபர் என்ற காரணத்தால் மேசை அருகில் வரமுடியாத அந்த நபர் அம்மா..... நான் அம்மா நான்..... என முணுமுணுக்கின்றார். "ஆம் ஐயா போய் முகாமில் இருங்கள் நான் உங்களுடைய வேலைகளை செய்து தருகின்றேன். இச்சனக்கூட்டத்தில் வந்து அவதிப்படாமல் அங்குபோய் இருங்கள் நான் இன்னும் ஒரு மணித்தியாலமளவில் அங்கு வருவேன்......"

'இப்படியெல்லாம் பாசமிகு மகளாக நடந்துகொண்ட திருமதி குசும் பியரத்தன அவருடைய கடமையை நிறைவேற்றினார்..... ஒரு கணப்பொழுதில் கையிலிருந்த கடிதத்தில் கையெழுத்திட்டு அதை திருப்பி அளித்த அவர் அடுத்தபடியாக வந்த இளைஞனை கதிரையில் சாய்ந்தபடி மேலிருந்து கீழாக நோக்கினார்.'

'ஏன் அங்கேயே நின்று விட்டீர்..... இந்த கதிரைக்கே வாரும்..... வரிசையென்றொன்று இருப்பது தெரியவில்லையா போய் வரிசையில் வாரும். என்று கூறிய அவரது தொனி அவரிருந்த அறையை மட்டுமன்றி கட்டிடத்தின் கீழ் மாடியையே அதிரவைத்தது. அவரில் தயவு, கருணை குடிகொண்டிருப்பது போலவே கம்பீரமும் குடிகொண்டுள்ளது.'

முதலில் நாற்பத்தெட்டாக இருந்த முகாம்களின் எண்ணிக்கை தற்போது பதினெட்டாக குறைந்துள்ளது. முகாம்களுக்குள் துர்ப்பாக்கிய செயல்கள் இடம்பெறுகின்றன. கஞ்சா, கசிப்பு(மதுபானம்), போதைப்பொருள் விற்பனை விமர்சையாக நடைபெறுகின்றது. சூரியன் தலைக்கு மேலாக இருக்கும் நெருப்பு வெய்யில். வெட்டவெளியில் சனக்கூட்டத்திற்கு இடையே அங்குமிங்கும் போகும்போதும் அநேகமான ஆண்களின் அருகில் செல்ல இயலாதளவிற்கு மதுபான நாற்றம் வீசுகின்றது.

'அப்படியே கடிதமொன்றையும் தூக்கிக்கொண்டு இங்கு வருவார்கள். வந்து ஏதாவது முணுமுணுக்க தொடங்குவார்கள்.... மூக்கை வைத்துக்கொண்டு எப்படித்தான் வேலைசெய்வது..... நானும் ஏசிக்கொண்டே கையெழுத்து இட்டு கொடுப்பேன்...... இந்த மக்களை திருத்த முடியாது. இவர்களால் பெண்கள்தான் அல்லலுறுகிறார்கள். இதுதான் பிரதேச செயலாளர் முடிவாக உள்ளது. கடற்கோளுக்கேனும் இம்மனிதர்களின் சிந்தனைகளை மாற்ற முடியாது போயுள்ளதா நாங்கள் எங்களிடமே கேட்டுக்கொள்வோம். இவர்களுக்கு ஏற்பட்ட இந்த துன்பத்தால் நாட்டிலுள்ள ஏனைய மக்களின் மனங்கள்தான் கரைந்தன. இதனாலேயே இவர்களுக்கு உள்நாட்டிலிருந்து இவ்வளவு துணிமணிகளும், உணவும் கிடைத்தது. எனினும் அவர்கள் கட்டாக்காலிகளாக இருப்பது புலனாகின்றது.'

எங்களுக்கு தின்றுகுடிக்க இருக்க இடம் நீங்கள்தான் தந்துதவவேண்டும். நாங்கள் கைகளைக் கட்டிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதை உண்டு கையில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு குடித்து எங்கள் மனைவியருக்கு மட்டும் அரசர்களாக கட்டாக்காலிகளாக சென்றுகொண்டிருக்கின்றோம்..... முகாம்களின் அருகில் வசிக்கும் பல ஆண்களின் நடத்தைகள் தொடர்பான கதைகளிலிருந்து இந்த செய்தியே கிடைக்கின்றது.

ஆரம்ப நாட்களில் 48 முகாம்கள் இருக்கையில் பருவப்பெண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் நிம்மதியாக இருக்க இடமளிக்கவில்லை. எனினும் நாங்கள் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தோம். பல வடிவிலான பெண் ஆடைகள் கிடைத்தன. அவை ஒரு சந்தர்ப்பத்தில் பல்வேறு துச்சமான நடவடிக்கைகளுக்கும் இழிவான செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்ததென குசும் பியரத்தன தெரிவிக்கின்றார்.

ஏழை வர்க்கம் உதவாக்கரையாகும் பட்சத்தில் அவர்களிடமிருந்து ஒரு அலுவலேனும் செய்துகொள்ள முடியாதென எம்மால் உணரமுடிந்தது.

மரணத்தின் முன் ஒழுக்கசீலமான மனிதாபமானம் இல்லாத மனிதர்கள் எப்படி இந்நாட்டின் சொந்தக்காரர்களானார்கள்? மிக நீண்ட வரலாறு ஒன்றுக்காக ஆரம்பகாலம் இதுவெனலாம். இன்று எப்படி இந்த மனிதநேயம் எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றது......? எப்போது எவ்வாறு அந்த மனித நேயத்தை மீண்டும்வர வழைப்பது......?

கடற்கோள் விட்டுச்சென்றுள்ள இன்னுமொரு பிரச்சனைதான் அது.......

எமக்கு அன்று ஜனரஞ்சமாக விளங்கியது இன்று வழிபாடுகளாக விளங்கும் ஹிக்கடுவை நகரத்திலிருந்து நாங்கள் மனதில் ஒரு பிரச்சனையை சுமந்த வண்ணம் வெளியேறினோம். ■

**கருணா பெரேரா**
**சுகந்திக்கா முத்துமுனி**

1. சுனாமி : இது ஜப்பானிய மொழியைச்சார்ந்த ஒரு சொல்லாகும். பருவப்பெயர்ச்சிக் காற்றின் காரணமாக தென்சீனக்கடலில் உருவாகும் ஆழிப்பேரலையாக ஜப்பானிய துறைமுகத்தைத் தாக்கிவருகின்றன. இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. எனவே அவர்கள் அதனை சுனாமி என அவர்களின் மொழியில் வழங்கிவருகின்றார்கள். தமிழ் வரலாற்றில் சங்ககாலத்தின் ஆரம்பம் முதலில் கடற்கோள்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தமிழ் மரபுக்கு இணங்க சுனாமி என்றசொல்லை கையாள்வதை விடுத்து அவ்விடங்களில் கடற்கோள் என்ற சொல்லை கையாண்டுள்ளோம்.

2. முப்பீதி : பௌத்த பெருமான் பௌத்த மதத்தை போதித்த காலப்பகுதியில் இந்தியாவின் விசாலா மாநகரில் ஒரு பக்கத்தில் பஞ்சபீதியும் மறுபக்கத்தில் நோய் பீதியும் இன்னொரு பக்கத்தில் ஆவிகள் பீதியும் காணப்பட்டதால் மக்கள் ஆங்காங்கே செத்துமடிந்தனர். ஆதனை கடற்கோளுக்கு உவமானமாக காட்டியுள்ளனர் ஆசிரியர்.



9 ஜனவரி 2005, போர்ட் பிளயர் : பேரலையால் பாதிக்கப்பட்ட அந்தாமான், நிகோபார் தீவுகளின் கரையோரத்தில் ஒரு அசாதாரணக் காட்சி. தாங்கள் அன்பு செலுத்தியவர்களை இழந்த பெண்களும், மற்றவர்களும், கடல் கடவுளருக்கு பிரார்த்தனை செய்து உனது கோப அலைகளை நிறுத்திக்கொள் என்று வேண்டுகின்றனர்.

www.timesfoundation.indiatimes.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படையில் அமைந்த இயல்புகளும்

## இலங்கையில் கடற்கோள் அனுபவம்



கடற்பெருக்கின்போது ஆண்களைவிட பெண்களே அதிகம் உயிரிழந்துள்ளார்கள் ஏன்? இது கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட கடல் பெருக்கெடுப்பின் பின்னர் நாட்டின் வடக்கு, கிழக்கு கரையோரப்பகுதிகளில் உயிரைக் காப்பாற்றிக்கொண்டவர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருப்பதற்கிடையில் நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்லும் இறப்புக்களின் எண்ணிக்கை தொடர்பாக அறியும்போது எமக்குள் பெருத்துன்பத்தை ஏற்படுத்தும் ஒரு வினாவாகும்.

சில சந்தர்ப்பங்களில் தங்களை நோக்கி மணித்தியாலத்திற்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் வந்த பேரலைகளை எதிர்கொண்டபோது அவர்களது வாழ்க்கை போராட்டத்திற்கான வலிமை குறித்து, பெண்கள் வாழ்ந்துமடிந்த, ஆண்–பெண் சமூக அந்தஸ்த்தைச் சார்ந்த சமூக மற்றும் கலாசார சூழமைவுகள் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதம் எம்மால் நோக்க முடிந்த சம்பவங்களிலிருந்து மிகத்தெளிவாகிறது. உயிரை காவுகொள்ளக்கூடிய கடற்பேரலைக்கு முகம்கொடுத்த சந்தர்ப்பத்தில் பல்வேறு இனரீதியிலானதும் மத ரீதியிலானதும் வேறுபாடுகளைக் காண முடிந்தாலும் அதிகளவில் சமத்துவத்தை அவதானிக்க முடிந்தமை கவனிக்கத்தக்க விசேட அம்சமாகும்.

நத்தார் தினத்திற்கு அடுத்தநாள் அதாவது டிசெம்பர் 26ஆம் திகதி ஞாயிறு தினமாகவும் பௌத்த சமயத்தவர்களுக்கு விசேட தினமான போயாவாகவும் இருந்தது. அன்று காலை வேளையில் வார நாட்களில் நிறைவேற்ற முடியாத பல்வேறு காரியங்களில் ஈடுபட்டும் வாரச்சந்தைக்குச் சென்றும் நண்பர்களை சந்திக்கும் பணியிலும் ஆண்கள் ஈடுபட்டிருந்தனர். பெண்கள் தத்தமது வீடுகளில் இருந்த வண்ணம் உணவு சமைக்கும் நடவடிக்கைகள், சுத்தம்செய்தல், துணிமணிகளைச் சலவைசெய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர். சிறுவர்கள் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். முதலாவது பேரலை வந்தபோது பெண்கள் பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக கடற்கரையை நோக்கி ஓடினார்கள். அப்போது அநேகமானவர்களை அது இழுத்துச்சென்றது. ஒருசிலர் முதலாவது பேரலையால் உயிர்தப்பிய போதும் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் மரணத்தை விளைவிக்கும் கணப்பொழுதில் பிள்ளைகளை தேடுவதற்கு உபயமளிப்பதற்கு அவர்களது குடும்பங்களில் உள்ள வயோதிப மற்றும் உடல்நலம் குன்றிய நபர்களை காப்பாற்றச்சென்ற சந்தர்ப்பத்தில் இரண்டாவது பேரலைக்கு அகப்பட்டார்கள். மேலும் சில பெண்கள் கடற்கரைக்கு வெளியே ஓடினார்கள் எனினும் அவர்கள் பாதுகாப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களை நோக்கி வரவில்லை. இறந்த உடல்கள் மற்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்களது கருத்துக்களின்படி இக்கொடூர சம்பவம் மிகத்தெளிவாக சித்தரிக்கப்பட்டது. இலங்கையில் பெண்களுக்கே உரித்தான கலாசார அடையாளங்களைக் குறிக்கும் உடைகளான சேலை, நீட்டுப்பாவாடை, லுங்கி போன்றவற்றையே பெண்கள் அணிந்திருந்தனர். முதலாவது பேரலையால் ஈரமான இந்த ஆடைகள் கால்களில் சிக்குண்டதோடு அவற்றை அணிந்திருந்தவர்களுக்கு அது மரணபிடியானது. அத்தோடு அவர்களது நீண்ட கூந்தலும் தடையாயிற்று. கூந்தல் மற்றும் ஆடைகள் சிக்குண்ட நிலையில் பெண்களின் அதிகமான சடலங்கள் மரஞ்செடி கொடிகளுக்கிடையில் சிக்கியிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

நாட்டில் தென்மேற்கு திசையில் கடற்கரையோரங்களில் பிரதானமாக சிங்கள-பௌத்த மக்கள் வசித்த பலபிட்டி, அக்குரலா, ஹிக்கடுவை ஆகிய பிரதேசங்களில் ஆண்களுக்கு மரமேறுதல் நீந்துதல் போன்ற ஆற்றல்கள் இருந்தமை காரணமாக உயிர்தப்பியிருப்பதை அறிய முடிந்தது. இவை ஒருபோதும் பெண்களுக்கு கற்றுக்கொடுக்கும் வாழ்க்கை திறமைகளாக இருந்ததில்லை. இவ்விடயங்கள் ஆண்தரப்பினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட பெண்களுக்கு தகுதியில்லாத செயல்கள் என்ற காரணத்தால் அவற்றில் ஈடுபடுவதற்கு அவர்களது குடும்பங்களிலிருந்தும் சமூகத்திலிருந்தும் தூண்டுதல் கிடைப்பதில்லை. உயிர்தப்பிய ஒரு பெண்மணி தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவரிடம் இவ்வாறு தெரிவித்திருந்தார். "அதிஷ்டவசமாக எங்கள் அம்மா எங்களை வீரப்பெண்களாக வளர்த்து ஆளாக்கியதால் எனக்கு பேரலையுடன் போராடி தப்ப முடிந்தது. மட்டக்களப்பு கல்லடி கடற்கரையை அண்டிய தமிழ் பெண்ணொருவர் அவருடைய சமூகத்தில் அவர் அசாதாரணப் பெண்ணாகப் பொதுவாக ஆண்கள் செய்யும் வேலைகள் மற்றும் பாரதூரமான உடலுழைப்பில் ஈடுபட்டிருந்ததன் பயனாக உயிர் பிழைத்ததாகத் தெரிவித்தார். கடற்பேரலைக்கு சவாலாக மரமொன்றை பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பதற்கான பலம் அதனூடாகவே அவருக்கு கிடைத்ததாகவும் தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் தம் "பாதுகாவலனாக" கருதப்பட்ட ஆண்கள் கடற்பெருக்கில் அகப்பட்டவர்களை மீட்கும்போது பெண்கள் ஆண்களில் தங்கிவாழ வேண்டும் என்ற சம்பிரதாயபூர்வமான சிந்தனைகளை கூறி ஒரு சிலரை பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கினார்கள். தென்னிலங்கை பெண் ஒருவரின் கருத்தின் பிரகாரம் தன்னைப் பலாத்காரம் செய்த ஆண் இவ்வாறு தெரிவித்துள்ளான். "நான் உன்னை சாவிலிருந்து காப்பாற்றுகின்றேன் அதனால் இது நீ எனக்கு தரும் சிறியதொரு அன்பளிப்பாகும்". மேலும் கடற்பேரலையின் அதிர்ச்சியும் தாக்கமும் பெண்களின் மேல் திணிக்கப்படும் எல்லாவித அதிகாரத்திலும் பலாத்காரத்திலும் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்-தவில்லை. அகதி முகாம்களில் பாலியல் வன்முறைகள், இருளான வேளைகளில் தொடுதல், தனியானதோர் இடம் அமையாத சந்தர்ப்பத்திலும் கணவனால் பாலுறவில் ஈடுபட விடுக்கும் வேண்டுகோள்களை நிராகரிப்பதால் வன்முறைக்கு இலக்காக நேரிடும் சந்தர்ப்பங்கள் போன்றவை தொடர்பாக அறியக் கூடியதாக இருக்கும்போது இவை இடம்பெயர்ந்த வேறு இடங்களில் நடைபெற்ற இதுபோன்ற சம்பவங்களை எமக்கு ஞாபகமூட்டின.

கடற்பேரலையால் கிழக்குப்பகுதி கடலோரங்களில் பிரதானமாக பாதிக்கப்பட்ட முஸ்லிம் தரப்பினரில் பெரும்பாலானோர் விவாகமாகாத இளம்பெண்கள் என்பதை அறிய முடிந்தது. அவர்கள் தமது சமூகம் உட்புறமய-ப்படுத்தலுக்கு உள்ளாகி இருப்பதன் காரணமாக ஆணொருவர் இல்லாது வீட்டிலிருந்து வெளியே செல்லக்கூடாது என்ற குடும்பக்கட்டளை காரணமாக அலைகள் தத்தமது வீடுகளை நோக்கிவந்தபோது தங்களைக் காப்பாற்ற ஆணொருவர் வரும்வரையிலும் வீட்டினுள் இருந்துள்ளார்கள். முதலாவது பேரலையால் தாங்கள் அணிந்திருந்த வஸ்திரங்கள் கிழிந்து கழன்றோடியபின் உயிர் பிழைக்க ஓடிய ஆண்களைப் போலல்லாது நீரில் மறைந்து தங்கள் உடலை கைகளால் மூடிக்கொண்டு உயிரை காப்பாற்ற முனையாது தண்ணீரிலே இருந்த சம்பவங்களை சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பிரதேசங்களிலிருந்து அறிய முடிந்தது. பகிரங்கமாக தமது உடலைக் காட்டுவது பற்றிய பொய்த்துப்போன சிந்தனைகளான பாரம்பரிய தடைகள் இரண்டாவது பேரலைக்கு அகப்பட்ட அவர்களுக்கு எதிராக செயல்பட்டன.

கடற்கோள் அழிவுக்குப் பின்னர் பாடசாலைகள் வணக்கஸ்தலங்கள் மற்றும் ஏனைய பொதுக்கட்டடங்களில் அத்தோடு தற்காலிக நலன்புரி நிலையங்களில் ஒன்றுகூடிய உயிர் தப்பியவர்களில் ஆண்கள் அவர்கள் இழந்த தாய்மார்கள் மனைவியர் பெண்கள் சகோதரிகள் மற்றும் புதல்வியர் தொடர்பான தகவல்களை எமக்கு வழங்கினர். அவர்களில் அதிகமானோர் உயிருடன் இருப்பது தொடர்பாகவும் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது போனது குறித்து அவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள். இறப்பின் சோகத்துடன் பெண்களுக்கு நீந்தும் ஆற்றல் இருந்திருந்தால் அல்லது மரங்களில் ஏற முடிந்திருந்தால் அல்லது பாரம்பரியம் என்ற சவாலை எதிர்கொள்ளும் ஆற்றல் இருந்திருந்தால் அவர்கள் இப்போதும் உயிருடன் இருந்திருப்பார்கள் என்ற கவலையும் இருக்கின்றது. இச்சம்பவங்களுக்கு மத்தியில் உயிருடன் இருக்கும் பெரும்பாலும் இளம் பெண்களுக்கு வேறுபாட்டை உணர்வதற்குள்ள வாய்ப்பு மிக அரிதாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் தமது குடும்பங்கள் அல்லது ஆண் தரப்பு உறவினர்கள் அவர்களுக்கு முன்னேற்றமடைய அவர்களது ஆற்றல்களை ஆராய்வதற்கு இதைவிட கூடிய வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பார்கள். அத்தோடு சமூகமும் மக்களும் பெண்களுக்கான சமத்துவம் என்பது வாழ்வும் சாவும், வாழ்க்கை வாழ்வதுடன் தொடர்புபட்ட ஒன்று என்பதை உணர்ந்துகொள்ளட்டும். ■

**சுனிலா அபேசேகர**

# சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் கூட்டமைப்பு
## (Coalition for Assisting Tsunami Affected Women)

டிசம்பர் 26 சுனாமி நடைபெற்று இரண்டு வாரங்களின் பின்னர், பெண் உரிமை, சமூக நீதி, ஜனநாயகம், மற்றும் சமாதானம் போன்ற விடயங்களில் ஈடுபடும் 60 பெண்கள் அமைப்புகளைக் கொண்ட நான்கு அரச சார்பற்ற நிறுவன வலையமைப்புகளின் கூட்டமைப்பே சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் கூட்டமைப்பாகும் (CATAW). இலங்கையில் 1காணப்படும் பிரதான இனங்களையும் மதங்களையும் கொண்ட சமூதாயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் இக்கூட்டமைப்பில் உள்ளனர். சுனாமியினால் பாதிப்புக்குள்ளான கிழக்கு மற்றும் தென் மாகாணங்களிலும் மற்றும் யாழ்ப்பாண தீபகற்பத்திலும் இக்கூட்டமைப்பின் அங்கத்துவ நிறுவனங்கள் பணி புரிகின்றன.

சுனாமி இடம் பெற்று இரண்டு வாரங்களினுள் பாதிப்படைந்த மாவட்டங்களில் (மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, காலி, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை) பணி புரியும் பெண்கள் அமைப்புகளையும், அவ்வாறான வேறு ஸ்தாபனங்களையும் ஊக்கப்படுத்தி ஆதரவு அளிக்கும் நோக்குடன் இவ்வலையமைப்பின் பல பெண்கள் இப்பிரதேசங்களுக்கு பயணங்களை மேற்கொண்டனர். அத்துடன் உடனடி நிவாரண உதவிகளை பகிர்ந்தளிக்கவும், பெண்கள் ரீதியிலான வன்முறைகள், பெண்களுக்கான குறிப்பிட்ட உணவு, புகலிடம், மீள்குடியிருப்பு மற்றும், ஜீவனோபாய தேவைகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும் இப்பிரதேசங்களுக்கு சென்றனர். அத்துடன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சேவையாற்றும் பெண்கள் குழுக்கள் மற்றும் அமைப்புகளுடனும் மிகவும் அவசரமான தேவைகள் சம்பந்தமாகவும் மீள்கட்டமைப்பு, மீள்குடியிருப்பு மற்றும் புனர்வாழ்வு தொடர்பான நடுத்தர மற்றும் நீண்டகால திட்டங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடல்களை நிகழ்த்தினோம்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் கூட்டமைப்பின் நடுத்தர மற்றும் நீண்டகால செயற்பாடுகளை பொருத்தமட்டில், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பெண்களுக்கு ஜீவனோபாய உதவிகளை வழங்குவதில் தற்பொழுது கவனம் செலுத்துகின்றது. வருமானத்தை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை உருவாக்கும் நோக்குடன், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் நூறு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படும். கேள்விகொத்துகளின் மூலமாக இப்பெண்களை இனங்கண்டு தேர்ந்தெடுக்கும் நடவடிக்கை தற்பொழுது நடைப்பெற்று வருகின்றது. இக்கேள்விகொத்துகள் பிராந்திய வலையமைப்புகளில் சேவையாற்றும் பெண்களின் மூலமாக பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் கூட்டமைப்பின் வலையமைப்புகளில் இணைந்துள்ள சகல பெண்கள் குழுக்களும் ஜனநாயகம், சமாதானம், நீதி மற்றும் நல்இணக்கம் போன்ற விடயங்களில் சேவையாற்றி வருகின்றனர். சுனாமியினால் பாதிப்புற்ற பிரதேசங்களில் உள்ள பெண்கள் நிறுவனங்களின் நிலையை மேம்படுத்த உதவி புரிவது அவசியம். இதன் மூலம் சகலரும் உள்ளடக்கப்படல், ஜனநாயகம் மற்றும் வேற்றுமைகளுக்கும் வித்தியாசங்களுக்கும் மதிப்பளித்தல் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் பாரியளவில் பாதிக்கப்பட்ட சமுதாயங்களை கட்டியெழுப்பி நாட்டின் இனபேதத்திற்கு ஓர் நிலையான மற்றும் நிரந்தர அரசியல் தீர்வைக் காணுவதே எங்களுடைய நீண்டகால இலக்காகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தத்தைக் கையாளுதலில், உள்ளடங்கிய கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும் என பெண்கள் குழுக்கள் வேண்டுகோள்



சுனாமி - பெண்கள் நிவாரண சேவை ஒன்றியத்தினால்

**பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட அறிக்கை**

2005 ஜனவரி 15 திகதி

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலைமைகளை மதிப்பிடுவதற்காக, தொடர்ச்சியாகக் குழுக்களை அனுப்பிய, பெண்களின் உரிமைகளுக்கான கூட்டமைப்புக் குழுக்கள், நிவாரண முயற்சிகளில் இதுவரை அணுகப்படாத, பெண்களின் பாதுகாப்பு, நலன் என்பன பற்றிய பாரதூரமான பிரச்சினைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றன.

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாத்தியமான விதங்களிலெல்லாம் நிவாரணமும், உதவியும் வழங்குவதற்காகச் சேகரிப்பு முயற்சிகளை மேற்கொண்ட பல பொது முயற்சிகளை நாம் நயக்கின்றோம். இருப்பினும், ஆழிப்பேரலைகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களின் விளைவாக அல்லலுற்றவர்கள், பழிபாவத்திற்கு அஞ்சாதவர்களினால் மேலும் வன்செயல்களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக இம் முயற்சிகளை மீள நோக்க வேண்டுமென்று நமது அவதானிப்புக்கள் காட்டி நிற்கின்றன.

தொடர்பாடல் வழிகள் அழிக்கப்பட்டமையினாலும், பெருமளவில் இடம்பெற்ற இடப்பெயர்ச்சியினாலும், மக்களின் மரணத்தினாலும் இப்பிரதேசங்களிலுள்ள மக்களின் காயப்படும் நிலை உச்ச கதியை அடைந்ததால், பெண்களும், பெண்பிள்ளைகளும் மேலும் வன்முறைகளை எதிர்நோக்கும் சாத்தியப்பாடு உருவாகியுள்ளது.

- குறிப்பாக, பாலியல் பலாத்காரம், கும்பல்களின் பாலியல் தொல்லைகள், பெண்களின் மீதும், பெண்பிள்ளைகளின் மீதும் உடல்ரீதியான துஷ்பிரயோகங்கள் என்பன, கண்காணிக்கப்படாத உயிர் காக்கும் முயற்சிகளின் போதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகமான உறைவிடங்களில் இருந்த போதும் குறிப்பாகத் தெற்கில் இடம்பெற்றமை பற்றி நாம் அறிக்கைகளைப் பெற்றிருக்கிறோம். இச்சம்பவங்களைத் தவிர (இவற்றின் எண்ணிக்கை அறியப்படவில்லை), பாலியல் வன்செயல்களுக்குப் பயப்படுவதனால், பெண்களின் இயங்கும் வசதிகளும் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் இவ்வறிக்கைகள் குறிப்பிடுகின்றன. முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், குற்றவாளிகளுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அல்லது இப்பிரதேசங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் தகுந்த கண்காணிப்புக் குழு எதுவும் உருவாக்கப்படவில்லை.

- இவ்வன்செயல்களைக் கவனத்திற் கொள்ளும்படியும், அத்தகைய சம்பவங்களை விசாரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் நாம் அரசாங்க அலுவலர்களையும், குறிப்பாகப் பெண்கள் விவகார அமைச்சையும் கேட்டுக் கொள்கிறோம். பால்நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள் தொடர்பாகப் பணிபுரியும் அரச நிறுவனங்களுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர், ஒக்ஸ்ஃபாம் (OXFAM) போன்ற முகவரகங்களுக்குமிடையில் கூட்டுச் செயற்பாடு இருக்க வேண்டுமென்றும் நாம் கூறுகின்றோம். நிவாரணச் செயன்முறையில் பாதுகாப்பிற்கான போதிய அளவு ஏற்பாடுகளும், முறைப்பாடுகளுக்கான நெறிமுறையும் ஏற்பாடு செய்யப்பட வேண்டியது அவசரமான முன்னுரிமை பெறவேண்டும்.

- ஆழிப் பேரலைகளினால் தாக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், உடல் ஊறுகளுக்கும், உள தாக்கங்களுக்கும் உள்ளானவர்கள், பிரத்தியேகமான வைத்தியக் கவனிப்புத் தேவைப்படுபவர்கள், நாளாந்தமும் தொடர்ச்சியாகவும் சிகிச்சை தேவைப்படுவோர் போன்ற பிரத்தியேகமாக வசப்படக்கூடியவர்கள் பற்றிய விபரங்களை வழங்கவில்லை என்பது பற்றி நாம் கவலைப்படுகின்றோம். எதிர்வரும் நாட்களில், முந்துரிமைத் தேவைகளை இனங்காண்பதற்கு, அத்தகைய தகவல்களைச் சேகரித்தல் மிக முக்கியமாகும். அத்துடன், ஆழிப்பேரலைகளின் தாக்குதலின் பின், வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் பற்றிய சரியான பதிவுகள் பரந்த அளவில் பொது மக்களிடையே அறிவிக்கப்படல் வேண்டும்.

- தமது குடும்பங்களிலிருந்த பிள்ளைகளை இனங்காண்பதற்கான ஒரு முறை இல்லாமை, தவறிப்போன பிள்ளைகளின் குடும்பங்களை இனங்காண்பதற்கோ, பிள்ளைகள் கண்டெடுக்கப்பட்ட இடங்களிலேயே, அப்பிள்ளைகளின் உறவினர்களிடையே அப்பிள்ளைகளை ஒப்படைப்பதற்கோவான முயற்சிகளைப் பாதித்துள்ளது. இப்பிரச்சினையை அணுகுவதற்கு பொறிமுறை ஒன்றை அமைக்கும்படியும், தேசியக் குழந்தைப் பாதுகாப்பு அதிகாரசபை, நன்நடத்தை பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து பணிபுரிய வேண்டுமென்றும் நாம் கோருகிறோம்.

- முதல் நடவடிக்கையாக, பிள்ளைகள் இருக்கும் இடங்களைப் பற்றி அறிந்து வைத்திருப்பவர்களை அப்பிள்ளைகளை, அண்மையிலுள்ள பொலீஸ் நிலையத்தில் அல்லது பிரதேசச் செயலாளர் அலுவலகத்திலுள்ள நன்னடைத்தை பிள்ளைப் பராமரிப்புத் திணைக்களத்தில் பதிவு செய்யும்படி அழைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இப்பிள்ளைகளின் இருப்பிடங்கள் பற்றி பத்திரிகைகளூடாகவும், இலத்திரனியல் ஊடகங்களினூடாகவும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

- காணாமற் போனவர்களையும், பிள்ளைகளையும் கண்டுபிடிப்பதற்கு மக்களுக்கு உதவுவதற்கு ஊடகம் செய்யக்கூடிய பங்களிப்பு முயற்சிகள் இரட்டிக்காத விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். பயனுள்ள விதத்தில் ஊடகங்கள் இணைந்து இயங்க வேண்டும்.

- அரசாங்கக் கச்சேரிகளின் மட்டத்திலும், பிரதேசச் செயலாளர் அலுவலகங்களின் மட்டத்திலும் நிலவும் ஒருங்கிணைப்பு முறைகள் போதியதாக இல்லாமல் இருப்பது ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. இப்பிரதேசங்களில் வாழ்ந்த, ஆழிப்பேரலைகளினால், இழப்புக்களுக்குள்ளாகிய அரசாங்க, பிரதேச நிர்வாக அலுவலர்களின் இடத்திற்கு சிரேஷ்ட, நடுத்தர மட்ட அலுவலர்களை அரசாங்கம் அனுப்பி வைக்க வேண்டியது மிகவும் முக்கியம். நிவாரண முயற்சிகளில் இவர்கள் வினைத்திறமையுடன் கடமைகளைச் செய்வதை உறுதிப்படுத்தும் வகையில், ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இவர்கள் இயங்க வேண்டும்.

- உயிருக்கும், சொத்துக்களுக்கும் ஏற்பட்ட பாரிய அழிவைக் கருத்திற் கொண்டு, உயர்தரப் பரீட்சையையும், பல்கலைக்கழகப் பரீட்சைகள் யாவற்றையும் அரசாங்கம் தள்ளிப் போட வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

உடனடியான நிவாரணத்தை வழங்கும் அரசாங்க அமைப்புக்களுக்கும், அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் தமது முற்றுமுழுதான ஆதரவை வழங்கவும் பெண் அபிவிருத்தி, நின்று நிலைக்கக்கூடியதும் நியாயமானதுமான சமாதானம் என்ற சட்டகத்தினுள் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடுத்தர, நீண்டகால புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்கவும், நாடு முழுவதிலுமுள்ள பெண்கள் குழுக்கள் முன்வந்துள்ளன. ■

1. **இலங்கையின் அன்னையரும் புதல்வியரும்**
2. **இலங்கை பெண்களின் அரசாங்கச் சார்பற்ற அரங்கு**
3. **சமாதானத்திற்கான பெண்களின் உடன்பாடு.**
4. **சமாதானத்திற்கான ஜனநாயகத்திற்குமான பெண்களின் உடன்பாடு**
5. **புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான செயல் வலையமைப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனையில் மீண்டும் கடற்பேரலை வரும் வதந்தி பரவியதால் தற்காலிக வீடுகளை விட்டு வெளியேறும் மக்கள்

# சுனாமியால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளின் போது மேலெழுந்த பாலியல் ரீதியான விளைவுகள்

சுனாமி பேரலை இலங்கையின் கரையோரத்தை தாக்கி ஒரு வாரம் பூர்த்தியாவதற்குள் மார்கழி 31ஆம் திகதி அன்று செய்தித்தாள்கள் சுனாமியிற் சிக்கிய பெண்களைக் 'காப்பாற்றும் போது' ஏற்பட்ட பெண்களிற்கெதிரான முதலாவது பலாத்காரச் சம்பவத்தை வெளியிட்டன. இதனைத் தொடர்ந்து சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களிற்குப் புகலிடம் அளிக்கும் வகையிற் தாபிக்கப்பட்ட பல நலன்புரி நிலையங்களிலும் இடம்பெற்ற பெண்கள் சிறுவர்களிற்–கெதிரான பலாத்காரச் சம்பவங்கள் பற்றிய பல தகவல்கள் வெளியாகின. பொலிஸ் முறைப்பாடு மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட இரு நிகழ்வுகள் கலுத்துறை மற்றும் நீர்கொழும்பில் பதிவாகியுள்ளன. ஒன்று தனது ஆண் நண்பனுடன் வாடி வீட்டில் மார்கழி 26ஆம் திகதி இரவு புகழிடம் புகுந்த பெண்ணின் மீது பாலியல் பலாத்காரம். மற்றையது மார்கழி 31ஆம் திகதி நீர்கொழும்பு கடற்கரையிலேற்பட்ட சேதத்தை பார்வையிடச் சென்ற இரு ஆடைத் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் பெண்கள் கடற்கரையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாகியதாகும். மேலும் இளம் பெண்ணொருவர் கூட்டுக் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிய சம்பவமும் பதிவாகியுள்ளது. சுனாமியின் பின்னர் உடனடியாக ஏற்பட்ட விளைவுகளின் போது பாலியல் வன்முறைக்கு உள்ளாகிய இரு பெண்களிற்கு சிகிச்சையளித்ததை கராப்பிட்டிய வைத்தியசாலை ஊர்ஜிதம் செய்ததெனினும், அவர்கள் வைத்திய–சாலையிலிருந்து வெளியேறியது மற்றும் தற்போது அவர்களின் நிலைமை பற்றிய எதுவித தகவல்களும் வைத்தியசாலையிற் காணப்பட்ட சூழ்நிலையால் பேணப்படவில்லை. மேலும், இவ்வைத்தியசாலை பாலியல் வல்–லுறவுக்குட்பட்ட இரு சிறுவர்களிற்கு சிகிச்சை அளித்ததையும் உறுதிப்படு–த்தியுள்ளது.

இலங்கையிலுள்ள பல மகளிர் அமைப்புகள், இலங்கை மகளிர் அரச சார்பற்ற கூட்டமைப்பு, தாய்மார் மகள்மாரிற்கான இலங்கை அமைப்பு, சமாதான சமத்துவத்திற்கான பெண்கள் கூட்டமைப்பு, குடியகல்வுத் தொழிலா–ளர்களின் செயற்பாட்டு வலையமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சமாதானத்திற்கான பெண்கள் கூட்டமைப்பு என்பன கூட்டாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களின் நலன் பாதுகாப்பு தொடர்பில் முகாம்களிற் காணப்படும் நிலைமைகளில் கூடிய அக்கறை எடுக்கப்பட வேண்டியதை வலியுறுத்தின. இவ்வேளையில் பல 'உண்மை' நிலையை விபரிக்கும் அறிக்கைகள் பெறப்படினும், அவை உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இது பாரிய சவாலாக அமைந்தது.

பெண்களிற்கெதிரான வன்முறைகளிற்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் என்ற ரீதியில் இவ்வாறான வேளைகளில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதிலுள்ள சிக்கல்களை நாம் நன்கு அறிவோம். பல வருடங்களாக பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டு இடப்பெயர்வுகளிற்கு மத்தியில் கடமையாற்றியதன் மூலம் சட்டம், ஒழுங்கு என்பன முறிவடைகையிலும், குடும்பம் மற்றும் சமூகத்தினால் வழங்கப்படும் பாதுகாப்பு ஒழிந்து போகையிலும் பெண்களே பாலியல், உடலியல் ரீதியான பலாத்காரத்திற்கும், துஷ்பிரயோகத்திற்கும் கூடுதலாக உள்ளாகின்றனர்.

பெண்களிற்கெதிரான வன்முறைகளை அறிக்கையிடல் தொடர்பில் காணப்படும் அசமந்த போக்கு அவற்றை மறுக்கும் தன்மையும் சுனாமியின் பின்னரான பெண்களின் பாதுகாப்பு மற்றும் தேவைகளை உறுதிப்படுத்தும் நடைமுறைகள், முக்கியத்துவத்தை இழப்பதை வெளிக்காட்டுகின்றன. தகவல்கள் திரிபடைவதுடன், பாலியல்ரீதியான இடப்பெயர்வு மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பமான ஆராய்ச்சிகளும் காணப்படுவதில்லை. இடம்பெயர்ந்தோரிற்கு சுகாதார சேவைகளை வழங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் பெண்களின் தேவைகளிற்கு விசேட கவனம் செலுத்துவதில்லை. முகாம்களின் உள்ளே மற்றும் வெளியே பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடைமுறைகளும் காணப்படுவதில்லை. இந்நிலைமையிற் கடைப்பிடிக்கப்படும் மிகவும் 'நடுநிலை' தன்மையானது, பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளிற்குக் குந்தமாக அமைகின்றன.



பெண்கள் மற்றும் ஊடகங்களின் ஒன்றிணைப்பின் மேற்பார்வையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களிற்கு உதவும் கூட்டமைப்பினால் (CATAW) சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு தகவல் சேகரிப்புக் குழுக்களை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பெண்களிற்கெதிரான வன்முறைகளை உறுதிப்படுத்துவதற்காக அவசியம் இருக்கவில்லையாயினும், பெண்களைப் பாதுகாக்கும் உத்திகள், குடிபெயர்ந்த மக்களிடையே காணப்பட்ட விழிப்புணர்வு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலீடுபட்டுள்ள நிறுவனங்களின் நிலைப்பாடு என்பனவற்றை அறிவது எமது குறிக்கோளாக இருந்தது. நாம் காலி, தங்காலை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, கல்முனை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிற்குச் சென்றோம்.

### பெறுபேறுகள்:

பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு பற்றி முகாம்களிலுள்ள பெண்கள் தகவலளித்தனர். குறிப்பிட்ட நிகழ்வுகள் இடம்பெறாவிடினும், பொது முகாம்களில் பாதுகாப்பற்ற தன்மை நிலவியது. பலாத்கார முயற்சிகள் பற்றிய தகவல்கள் பொதுவாக ஆண் பொறுப்பதிகாரிகளின் நிமித்தம் கிடைக்கப்பெற்றன. தற்காலிக மின் விநியோகம் காணப்பட்ட ஒரு முகாமில் வேண்டுமென்றே மின்தடையை ஏற்படுத்தி இருட்டில் பெண்களின் உடலைத் தடவும் நிகழ்வுகள் பதியப்பட்டிருந்தன. சுனாமியிலிருந்து மீட்கப்பட்டோர் மீட்புப்பணியின் போது தடவப்பட்ட சம்பவங்களும் காணப்பட்டன.

சுனாமி ஏற்பட்ட இரண்டாவது வாரமளவில் தென் பிரதேச முகாம்களில் பொலிசாரும், கிழக்கு பிரதேச முகாமில் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலீடுபட்டனர். எனினும், இவர்கள் முகாம்களில் நன்னடத்தையை உறுதிப்படுத்துபவர்களாகவேயன்றி பெண்களிற்கெதிரான வன்முறை தொடர்பில் அனுபவமற்றோராகவே காணப்பட்டனர். அவர்களது முக்கிய கடமையானது வெளியார் முகாம்களிற்குள் நுழைவதைத் தடுப்பதும், மது போதையிலுள்ள ஆண்கள் நுழைவதைத் தடுப்பதுமாகவே அமைந்தது. சிலர் முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டனராயினும், ஏனையோர் அவை தமது வரையறைக்கு அப்பாற்பட்டது என நிராகரித்தனர். இது அவர்களிற்கு வன்முறைக்கெதிரான முறைப்பாடுகளைக் கையாள்வதில் துல்லியமான அறிவுரை வழங்கப்படாமையையே உணர்த்துகின்றது.

மேலும் பெண்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் பாராமுகமாக இருக்கும் முகாம் அதிகாரிகள் பற்றி முறையிட்டனர். நாங்கள் விஜயம் செய்த பெரும்பாலான முகாம்களில் பட்டியல் பராமரித்தல், நிவாரணங்களைப் பகிர்தல், உறவினரை சந்திக்க அனுமதி வழங்கல் தொடர்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலாக ஆண்களே கடமையாற்றினர். தங்காலையில் முகாம்களிற் காணப்பட்ட பெண்களிற்கெதிரான வன்முறை தொடர்பான முறைப்பாடுகளினால், பொலிசார் 'முகாம் மன்றங்களை' ஸ்தாபித்துள்ளனர். எனினும் இச்சமூகங்களிலிருந்து இரு ஆண்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதை தீர்மானமாக கூறியிருந்தனர்.

ஆண் அதிகாரிகளிற்கெதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளில் உள்ளாடை விநியோகத்தின் போது வெளிப்படையாக அளவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விமர்சனங்கள் அவர்களை நாண வைத்த சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு முகாமில் ஆண் உத்தியோகத்தர்களே சுகாதாரத் துவாய்களிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் ஒரு முறையில் இரண்டு வீதமே வழங்கியதால், மீண்டும் மீண்டும் அவர்களிடம் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும், பெண்கள் முறையிட்டிருந்தனர். இவ்வாறான வெளிப்படையான வெட்கத்திற்குரிய பாலியல் ரீதியாக துஷ்பிரயோகங்கள் பெண்களை ஊனமாக்கி அவர்களது தேவைகளை மூடி மறைக்கும் நிலைக்குட்படுத்தியது. மதகுருமாரினால் கொண்டு நடாத்தப்பட்ட சில முகாம்களிலும் கூட பெண்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. இதனால் பெருமளவிலான சுகாதார துவாய்கள் விநியோகிக்கப்படாது களஞ்சியங்களிற் இருப்பதைக் கண்டோம்.

பெண்களின் சுகாதார வசதிகளை உன்னிப்பாக கவனித்த போது, பொதுவாக பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பில் குறைந்தளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். மேலும் இனவிருத்தி மற்றும் பாலுறவு சுகாதார வசதிகள் இம்முகாம்களில் குறைவாகவே காணப்பட்டன. காலியில் கருத்தடை விநியோகந் தொடர்பில் அக்கறை காணப்படாதவிடத்து, இம் முகாம்களில் பாலியல் நடவடிக்கைகள் முற்றாக இல்லை எனவும் மறுக்கப்பட்டது. இது சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களிலும் காணப்பட்ட பெண்கள் தங்கள் கணவர், மற்றும் ஆண் துணைகளின் அந்தரங்கமற்ற நிலையிலும் உடலுறவிற்கு நிர்ப்பந்திக்கப்படும் சம்பவங்களிற்கு முரணாகவே காணப்பட்டது. கல்முனையிலுள்ள குடும்பநல உத்தியோகத்தர்கள் கருத்தடைகளிற்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவித்தனர்.

## சிபாரிசுகள்:

- இடம் பெயர்ந்தோருடன் கடமைபுரியும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பாலியல் ரீதியான பெண்களிற்கே உரித்தான விசேட தேவைகளில் கவனஞ் செலுத்த வேண்டும்.
- உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பில் வகுக்கப்படும் சகல சேவைத் திட்டங்களும் பெண்களின் தேவைகள் தொடர்பில் அவர்களின் உரிமைகள் அடிப்படையில் அமைய வேண்டும். இப்பிரதேசங்களிற் காணப்படும் பெண்கள் நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்தல் மற்றும் நடுத்தர நீண்ட கால புனர்நிர்மாண அபிவிருத்தி நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.
- முகாம்கள் தொடக்கம், தேசிய செயற்பாட்டு மையம் வரையிலான சகல நடைமுறைகளிலும் பெண்கள் எல்லா நிலைகளிலும் பங்குபற்றுதல் அத்தியாவசியமாகும்.
- மேலும் மாவட்ட, பிராந்திய பிரதேச செயலாளர் பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ சபைகளில் பெண்களின் பங்களிப்பு அத்தியாவசியமாகும்.
- பிராந்தியரீதியாகச் செயற்படும் மகளிர் அமைப்புகள் அச்சபைகளிற்கு தங்கள் பிரதிநிதிகளை நியமிக்க அழைக்கப்பட வேண்டுமென்று நாம் சிபாரிசு செய்கிறோம்.
- பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பெண்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்து முகமாக முகாம்களில் உத்தியோகத்தர், படையினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.
- பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அங்குள்ளோர் மீள்குடியேற்றப்படுகையில் குடும்ப அங்கத்தவர் ஒன்றாக இருக்கும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது அவர்களின் மிஞ்சிய உறவினர்களை இணைப்பதாக அமையும்.
- விதவைகள், பெண்களின் தலைமையிலான குடும்பங்கள் வலது குறைந்த பெண்கள், வயது முதிர்ந்த பெண்கள் தொடர்பான நிலவுரிமை, உறைவிட வசதிகள், தொழில் வாய்ப்பளித்தல், மீள்கட்டியமைத்தல் மற்றும் தொழிற்பயிற்சியளித்தல் என்பவற்றின் பால் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- பெண்களிற்கெதிரான வன்முறைகள், மற்றும் அதிகாரிகள் தீர்மானம் எடுப்போருடன் நெருங்கிய தொடர்பை வளர்ப்பதில் பெண்களிற்கு மகளிர் அமைப்புக்களும், சமூகஞ் சார்ந்த அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ■

---

**சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் கூட்டமைப்பு தயாரித்த அறிக்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள்

**சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் கூட்டமைப்பின் சில அங்கத்தவர்களால் 2005 ஜனவரி 7-8 திகதிகளில் காலி மற்றும் அம்பலாங்கொட ஆகிய சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான விஜயத்தின் போது அறிவிக்கப்பட்ட தகவல் சேகரிப்பு**

## அறிமுகம்

சுனாமி பேரலையின் பின், அப்பிரதேசங்களில் வாழும் பெண்கள் முகம் கொடுக்க நேரிடும் பிரச்சனைகள் சம்பந்தமான விடயங்களை கலந்தாலோசிக்க பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு சிவில் சமூக குழுக்களுடன் கூட்டமொன்றை நடத்தியது. இச் சம்பவங்கள் தொடர்பாக உடனடியான திட்டமொன்றினைத் தீட்டி நடவடிக்கை எடுப்பதற்கு, அறிவிக்கப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகள் சம்பவங்களைச் சேகரித்து ஆவணப்படுத்தலுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியம் என இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. எமக்கு கிடைக்கப் பெற்ற பெண்களுகெதிரான பாலியல் வன்முறை சம்பவங்கள் பற்றிய தகவல்களை அறிவிக்கையில் காணப்படும் பொறுப்பும் தெளிவுமற்ற தகவல் தொடர்பாடல், தஞ்சமடைந்த முகாம்களில் பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் காட்டப்படும் தாமதமும் தயக்கமும் பெண்களின் பாதுகாப்பிற்கும், தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படாத ஓர் அபாயகரமான சூழ்நிலை தென்படுகின்றது என்பதினையே எடுத்துக் காட்டியுள்ளது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிலமையினை அறிவிக்க அதிகூடிய அல்லது குறைந்த தகவல் தொடர்பாடல் வசதிகள் காணப்பட்டபோதிலும், பால்




**தாமதமும் தயக்கமும் பெண்களின் பாதுகாப்பிற்கும், தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படாத ஓர் அபாயகரமான சூழ்நிலை தென்படுகின்றது என்பதினையே எடுத்துக் காட்டியுள்ளது.**

ரீதியிலான இடப்பெயர்வு மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனஞ் செலுத்தபடவில்லை. நிவாரண முகாம்களில் சுகாதாரம், அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஈடுபட்டிருந்த அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள் சகலருக்கும் பொதுவான பராமரிப்பு சேவையிலேயே அக்கறை செலுத்தினர், இவ்வாறான சூழ்நிலையில் பெண்களின் பாதுகாப்பு, தனிப்பட்ட தேவைகள் போன்ற விடயங்களில் கவனஞ் செலுத்த தவறியுள்ளனர். இந் நிலையில் பாதுகாப்பு சம்பந்தமான சமநிலையிலான சிந்தனை பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எடுக்கும் நடவடிக்கைளுக்குத் தடையாகவுள்ளது.

இவ்வாறான ஆவணப்படுத்தலை ஊக்குவிப்பதற்கான காரணம், கிடைக்கப் பெற்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய தகவல்களை உறுதிபடுத்துவதற்காகவல்ல. ஏனெனில், இடம் பெயர்ந்து அநாதரவான நிலையில் காணப்படும் பெண்கள், ஆண்களினால் பாதுகாப்பற்ற வன்முறைகளுக்கு முகம் கொடுக்கும் அபாயகர நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என்ற விடயம் யாவரும் அறிந்த ஒன்றே. பெண்கள் இவ்வாறான அபாயகர சூழ்நிலைக்கு முகம் கொடுக்கின்றனர் என்பது நன்கு தென்பட்ட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதிலும், இப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணத் தயக்கம் காட்டுகின்றனர். அத்துடன் பெண்கள் பாதுகாப்பு ஓர் முக்கியமற்ற விடயமெனக் கருதுவது மட்டுமன்றி நடைபெற்ற சம்பவங்களை பெரிதுபடுத்தி காட்டுகின்றனர் என்றும் அவ்வாறான சம்பவம் நடைப்பெறவில்லை-யெனவும் கூறுகின்றனர்.

இதனால் முகாம்கள், வைத்தியசாலைகள், பிராந்திய அலுவலகங்கள், மற்றும் ஆலயங்களுக்கு விஜயம் செய்து தற்காலிகக் கூடாரங்களிலும், முகாம்களிலும் பெண்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்க்கு ஏற்படும் அச்சுறுத்தல் போன்றவற்றை ஆராய்ந்தோம்.

## விஜயத்திற்கான ஏற்பாடுகள்

பெண்களுகெதிரான பாலியல் வன்முறைகள் நடைபெற்றதாக கருதப்படும் பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்டது. இப் பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ள ஆறு அங்கத்தவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஆவணப்படுத்தல் நடவடிக்கைக-ளுக்கான ஆரம்ப திட்டத்தினை இக்குழு வகுத்தது. இதில் ஆவணப்படுத்தலின் அடிப்படை தத்துவங்களுக்-கேற்ற தகவல் சேகரிப்பு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நடந்த பெண்களுகெதிரான வன்முறைகள் பற்றிச் சேகரிக்க வேண்டிய தகவல்கள் சம்பந்தமாக, இக் குழுவின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கடமைகள் பகிர்ந்தளிக்-கப்பட்டன. கீழ் காணும் வட்டாரங்களுடன் இது சம்பந்தமாக விசாரித்தோம்.

1. நலன்புரி முகாம்களில் பெண்கள் பாலியல் பலாத்காரச் சம்வங்கள் பற்றிய அறிக்கைகளைச் சேகரித்துள்ள பெண்கள் அமைப்புகள்.
2. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடகங்களினாலும் இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்ட பெண்களுகெதிரான பாலியல் வன்முறைகள் பற்றிய தகவல்களும் ஆவணங்களும்.
3. பொலீஸாரிடம் முறையிடப்படாத பாலியல் பலாத்கார சம்பவங்ளை உறுதிப்படுத்திய காலி வைத்தியசா-லைகளும் மருத்துவர்களும்
4. முகாம்களில் வாழும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சர்வோதய போன்ற வேறு அமைப்புகள் மேற்கொண்ட நடவடிக்கைகள்.
5. முகாம்களில் வாழும் பெண்களின் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் சுகாதாரம் சம்பந்தமாக (UNAID போன்ற) சர்வதேச அமைப்புகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

இங்கு பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு ஆவணப்படுத்தலை ஆரம்பித்தல், அத்துடன் பரந்த நோக்குக் கொண்ட கேள்வி தொகுப்பொன்றை வடிவமைத்தல். இத் தொகுப்பின் மூலம் முகாம்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு சம்பந்தமான பிரதான தகவல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும். இக் கேள்வித் தொகுப்பானது எங்களுடைய நடவடிக்கைகளுக்காக பொலீஸ், முகாம்களில் தங்கியுள்ள பெண்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை அணுகி தகவல்களைப் பெற உருவாக்கப்பட்டதேயன்றி தகவல் பரிமாற்றத்திற்காக அல்ல.

## இவ் விஜயத்தின் குறிக்கோள்கள்

காலிக்கும் அதனை சூழவுள்ள பிரதேசங்களுக்குமான விஜயத்தின் பொதுவான இலக்குகள்.

- முகாம்களிலும் வெளிமிடங்களிலும் பெண்களுக்-கெதிரான பாலியல் வன்முறைகளுக்கும் மற்றும் பாலியல் பலாத்காரத்திற்கும் முகம் கொடுக்க வேண்டிய அபாயகர சூழ்நிலை காணப்படுகின்றது என்ற தகவல்களின் உண்மை நிலையினை அறிதல்.
- நிவாரணப்பணியில் ஈடுபட்டிருந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (அரச மருத்துவ சேவையில் உள்ளடக்கப்படும் மருத்துவர்கள், தாதிமார்கள், சுகாதார அதிகரிகள், பாதுகாப்பு படையினர், மற்றும் உள்ளூர் நிர்வாகிகள்) பெண்களினதும் சிறுவர்க-ளினதும் பாதுகாப்பு, சுகாதாரம், பாலுரிமை போன்றவற்றிற்க்கு முதலிடம் கொடுக்கின்றனரா என்பதை விசாரித்தல்.
- முகாம்களின் முகாமைத்துவம், அத்துடன் அவைகளின் வடிவமைப்பு பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துகின்றனவா அல்லது அச்சுறுத்தலாக அமைகின்றனவா போன்வற்றைப் பற்றிய தகவல்களைப் பெறல்.
- பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் பற்றிய தகவல்களைப் பொறுப்புணர்ச்சியுடன், தெளிவாகவும் வெளியிட வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டவும், இவ் விடயங்கள் சம்பந்தமான தகவல் தொடர்பாடலில் உள்ள குறைபாடுகளை அடையாளங் கண்டு நிவர்த்தி செய்தலும்.

## இவ் விஜயத்தின் பிரதிபலன்கள்

அ) செயற்பாடுகள் அட்டவணை

1. எங்களுடைய நடவடிக்கையின் முதல் கட்டமாக சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பெண்களின் சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமாக கலந்துரையாட, காலியிலுள்ள சிவில் சமூக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டோம். இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சிலர் பாதுகாப்பிற்கும் ஜனநாயகதிற்குமான உரிமைகள் இயக்கத்தின் ஓர் கிளையமைப்பின் அங்கத்தவர்களாவர். அத்துடன் மனுகுலத்திற்கான வீடமைப்பு திட்டம் (Habitat for Humanity), மீனவர்களின் கூட்டுறவுச் சங்கம், மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளான 'மானவ சக்தி பதனம' மற்றும் 'மானவ ஹிமிகம் சன்விதானய' போன்றவை இக் கூட்டத்தில் கலந்துக் கொண்டன.

2. காலியில் நான்கு நலன்புரி முகாம்களுக்கும் பட்டபொலவில் ஒரு முகாமிற்கும் விஜயம் செய்தோம். ஓர் முகாம் முஸ்லீம் மக்களுக்கும் எஞ்சிய அனைத்து முகாம்களும் பௌத்த சிங்கள மக்களுக்கும் புகலிடம் அளித்துள்ளது. விஜயம் செய்த முகாம்களில் இரண்டு பௌத்த ஆலையங்களிலும், மற்றவொரு முகாம் கிறிஸ்தவ ஆலையத்திலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

3. சிங்கப்பூர் மற்றும் பிரித்தானிய மருத்துவக் குழுக்களின் மூலமாக சுகாதாரம், ஆரோக்கியம் சம்பந்தமான சில தகவல்கலைப் பெற்றோம்.

4. கராப்பிடிய மற்றும் பலப்பிட்டிய வைத்திய சாலைகளுக்கு விஜயம் செய்து அங்கு சேவையாற்றும் மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள், அத்துடன் அங்கு சேவையாற்றும் சிலரிடமும் கலந்தாலோசித்தோம்.

5. ஹபரதுாவ, மீட்டியாகொட பொலீஸ் நிலையங்களுக்கு சென்று அங்கு பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய முறையீடுகள் பதிவு செய்யப்பட்டனவா என விசாரித்தோம்.

ஆ. பாலியல் ரீதியிலான வன்முறை சம்பந்தமான விழிப்புணர்வு

பெண்களின் பாதுகாப்பு, அவர்களுக்கு எதிரான வன்முறைகள், மற்றும் பாலுரிமை சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக நாம் விசாரணை செய்த பொழுது மக்கள் இதைமிட்டு வியப்படையவில்லை. பெண்கள் பாலியல் பலாத்காத்திற்குட்பட்ட, முகாம்களில் அவர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தபடுகின்றதெனவும் உறுதி செய்தனர். எங்களுடன் உரையாட தயக்கம் காட்டிய பலர் தாமாகவே முன் வந்து பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் பல 26 டிசம்பர் அன்றும், முகாம்கள் முறையாக ஒழுங்கு படுத்தப்பட முன்னரும் நடைப்பெற்றமையை உறுதிப்படுத்தினர்.

இத் தகவல்கள் அகதிகளிடையே இயல்பாக நடைப்பெறும் பேச்சு வார்த்தையின் பொழுது பகிர்ந்துக் கொள்ளப்பட்டவையாகும். முகாம்களில் வாழுவோர் ஒருவருக்கொருவர் தகவல்களைப் பகிர்ந்துக் பாலியல் பலாத்கார சம்பவங்களைப் பதிவு செய்து கொண்டனர். இவ்வாறன விடயங்களில் பெண்களே கூடிய அக்கறை செலுத்தினர்.

முகாம்களில் பாதுகாப்பு படையினர் சேவையாற்றுகின்றமை பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது.

இ. பாலியல் பலாத்காரச் சம்பவங்கள்

கடற் பேரலையின் பின்னர் பாலியல் வன்முறைகளுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் இச் சம்பவத்தை பொலீஸ் நிலையத்தில் முறையிட தயங்கியமைக்குக் காரணம் அவர்களுடைய பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் அல்லது சமுதாயத்தினால் தள்ளிவைக்கப்படுவர் என்ற அச்சமுமாகும் என நிவாரணப் பணியில் ஈடுப்படுவோரும் மருத்துவர்களும் தெரிவித்தனர். கராபிட்டிய வைத்தியசாலையிலுள்ள மருத்துவ வட்டாரங்களிலிருந்து இரண்டு பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்களும், சிறுவர்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களும் கிடைத்தன. அச் சம்பவங்கள் பொலீசாரிடம் முறைமிடப் படவில்லை.

பலப்பிட்டிய வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியும், சுகாதார வைத்திய அதிகாரியும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் எதுவும் முறையிடப்படவில்லை எனத் தெரிவித்தனர்.


ஈ. 'தகவல்கள் இல்லை' எனும் கூற்று

தாங்கள் வாழும் சமூகத்தின் மத்தியில் பல பிரச்சனைகளையும், சிக்கல்களையும் தோற்றுவிக்கும் என்ற அச்சத்தினால், வெளிமிடத்தவரிடம் தகவல்களைப் பரிமார பெண்கள் தயங்கியமையை நாம் நன்கு உணர்ந்தோம். ஒரே கிராமத்தவர் காணப்படும் முகாம்களில் வாழும் பெண்கள் தங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பல முறை கூற முயன்றனர். இவ்வாறான சம்பவங்களை முறையிடுவது தாம் சமூகத்திற்கு இழைக்கும் துரோகமாகக் கருதுகின்றனர். அத்துடன் தங்களுடைய வீடுகளையும், குடும்பங்களையும் மற்றும் ஜீவனோபாயத்தையும் இழந்த பெண்கள், இம் முகாம்களே தங்களுடைய புதிய குடும்பம் எனவும் எண்ணுகின்றனர்.

முகாம்களில் வசிப்பவர்கள் தங்களுடைய சொந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் தங்களுக்கு எவ்வித வன்முறைச் சம்பவங்களும் ஏற்படவில்லை எனப் பல பெண்கள் கூறினர். அத்துடன் அவ்வாறான நிகழ்வுகள் சியம்பலாகஹவத்த, மீட்டியாகொட மற்றும் உனவட்டுன பிரதேசத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும் அங்குள்ள முகாம்களிலுமே நடைபெற்றதாகக் கூறினர். இவர்களுடைய கூற்றின் உறுதிப்பாட்டை ஆராய அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொழுது அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் நடைப்பெறவில்லை என அங்குள்ளவர்கள் மறுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவணப்படுத்தல் முயற்சியில் எங்களது நேரத்தை அதிகளவில் செலவு செய்து முழு அர்ப்பணிப்புடன் இம் முயற்சியில் இறங்குவது அவசியம் என்பதை உணர்ந்தோம். அத்துடன் காலியில் பாதிக்கப்பட்ட பெண்கள் எம்முடன் இயல்பாக, திறந்த மனதுடன் வெளிப்படையாகப் பேச வேண்டுமாயின் அச் சமூகத்துடனான தொடர்பை அதிகரித்து வலுப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபடுதலும் அவசியம். குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் இழைத்த தவறுகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள அச் சமூகத்தின் பெண்களுடன் கூடியளவிலான தொடர்பை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமான விடயமாகவுள்ளது.

உ. குற்றம் இழைப்போரிடையே காணப்படும் ஒரே விதமான இயல்பு

முகாம்களுக்கு விஜயம் செய்த பொழுது, அங்கு தஞ்சம் புகுந்துள்ளோர் (இரு பாலாரும்) பெண்களின் பாதுகாப்பை அவர்களுடைய சமூதாயம் உறுதி செய்கின்றதென அழுத்திக் கூறினர். பாலியல் பலாத்காரமும் வன்முறைகளும் வெளியிடத்தார் முகாம்களுக்குள் பிரவேசிக்கும் வேளையிலும் வேறு கிராம மக்கள் இம் முகாம்களில் புகலிடம் தேடி வரும் பட்சத்திலுமே இடம்பெறுகின்றது எனக் கூறினர். இவ்வாறான குற்றச் செயல்கள் குடி போதையினாலும், போதைப் பொருள் பாவனையினாலுமே நடைப்பெறுகின்றது என ஆண்களும் பெண்களும் தெரிவிக்கின்றனர். சுனாமி பேரலை வந்து சென்ற அடுத்த கணம் போதைப் பொருள் பாவனை-யாளர்கள் ஓர் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் சியம்பலாகஹவத்தையில் நடைப்பெற்றது என அறியத் தந்தனர். இவர்களின் அறிக்கைகள், நடைபெற்ற குற்றச் செயல்களை பால் ரீதியிலான வன்முறைகள் என கருதவில்லை.

ஊ. மருத்துவ சேவை

மருத்துவ குழுக்களை பேட்டி கண்டு விசாரித்ததிலிருந்து பெண்களின் பாலுரிமை, இனப்பெருக்க உரிமை போன்றவற்றுக்கு மருத்துவ சேவையில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்டோம். சமுதாயத்தின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தில் இம் மருத்துவ குழுக்கள் இருந்த பொழுதிலும் அவர்களின் கடமையை முழுமையாக நிறைவேற்றத் தவறியுள்ளனர். ஏனெனில் ஒருவரின் உடம்பில் ஏற்படும் காயங்களை குணப்படுத்துவதில் மாத்திரம் ஈடுபடாது பாதிக்கப்பட்டவரின் நலன் கருதி உடல் நிலை மற்றும் மனநிலை இரண்டையுமே பராமரித்தல் அவசியம்.

சுகாதாரப் பராமரிப்பு சேவைகளில் மாத்திரம் ஈடுபட்டிருந்தக் காரணத்தினால், பாலியல் பலாத்காரம் மற்றும் வன்முறைகள் போன்ற சம்பவங்களை அறிந்து கொள்ள முடியவில்லை என மருத்துவ அதிகாரிகளைக் கொண்ட ஓர் நடமாடும் குழுவொன்று தெரிவித்தது. இன்னுமொருக் குழு முகாமொன்றில் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை சம்பவங்கள் நடைப்பெற்றதாக செய்திகள் எட்டியதாகவும் ஆனால் முகாமின் பெயரை மறந்துவிட்டதாகவும், இச் சம்பவங்களை ஆவணப்படு-த்தவில்லை எனவும் அத்துடன் உயர் அதிகாரிகள் எவரிடமும் முறையிடவுமில்லை எனத் தெரிவித்தனர். காலி மாவட்ட சுகாதார மருத்துவ உயர் அதிகாரி இச் சம்பவங்கள் குறித்து நடமாடும் மருத்துவ குழுக்கள் தன்னிடம் தகவல்கள் எதனையும் தெரிவிக்கவில்லை எனக் கூறினார்.

கருத்தடை மாத்திரைகளை வழங்குதல், பாதுகாப்பான பாலியலுறவு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தல், பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரித்தல், எயிட்ஸ் மற்றும் சமூக நோய்கள் சம்பந்தமான தகவல்களை வெளியிடுதல் போன்ற செயற்பாடுகளுக்கு வைத்திய பராமரிப்புப் பிரிவுகள் கவனஞ் செலுத்தவில்லை. அதிகளவிலான கருத்தடை மாத்திரைகள் விநியோக-த்திற்காக ஒப்படைக்கப்பட்ட போதிலும் இவை கூடியளவில் விநியோகிக்கப்படவில்லை. அத்துடன் இவைகளைப் பற்றிய கண்காணிப்பும் மந்த நிலையிலேயே காணப்பட்டது. இம் மாத்திரைகளின் பயன், மற்றும் பாதுகாப்பான பாலியலுறவு, பாலுரிமை போன்றவை சம்பந்தமான ஆலோசனைகளுக்கு முன்னிடம் கொடுக்கத் தவறியுள்ளனர். பல அதிர்ச்சிகளுக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு பாலியலுறவு என்பது உடனடி தேவையல்ல எனவும் நிவாரணப் பணியின் மத்தியில் பாலியற் செயற்பாடுகள் சம்பந்தமான விடயங்கள் முக்கிய இடத்தை பெற மாட்டாது என்பதும் இப் பணியில் ஈடுபடுவோரின் பொதுவான யூகமாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*மட்டக்களப்பு - அனர்த்த முகாமைத்துவத்துக்கான பெண்கள் கூட்டமைப்பினரிடமிருந்து மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுக்குழுவினருக்கான அறிக்கை - 12 தை 2005*

# இடம் பெயர்ந்த பெண்களின் நலன்களும் உரிமைகளும்.

கடற் பேரழிவின் பின்னர் ஏற்பட்ட பாரதூரமான பிரச்சனைகளுக்கு முகங்கொடுப்பதில் அரச அதிகாரிகளும் ஏனைய முகவர்களும் எதிர் கொள்ளும் அழுத்தங்களை நாம் அறிவோம். எனவேதான் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்கள் கூட்டமைப்பினராகிய நாம் சுனாமி பேரழிவுப் பிரச்சனைகளை கைக்கொள்ளுகின்ற அரசாங்க அமைப்புக்களுக்கும் ஏனையோருக்கும் இடம் பெயர்கப்பட்ட மக்களின் நலனுக்கான நீண்டகால திட்டம் தொடர்பாக எமது வளங்களையும், நிபுணத்துவத்தையும் தருவதற்கு விரும்புகின்றோம். பிரதேசத்திலுள்ள சகல பிரிவினரும் ஒன்றிணைந்து பணிபுரிய வேண்டிய தருணம் இது என நாம் கருதுகின்றோம்.

டிசம்பர் 26ஆம் திகதி சுனாமித் தாக்குதலால் இடம் பெயர்ந்த மக்களின் நலன்கள் தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்படும் ஒழுங்குகள் பற்றிய எமது கருத்துக்களைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். இடம் பெயர்ந்தவர்களுடன் போதுமான அளவு கலந்துரையாடாமலும் அவர்களது விருப்பங்களைக் கேட்காமலும் அவர்களைத் தற்காலிகமாக இன்னோர் இடத்திற்கு மாற்றுவது குறித்த முடிவுகள் எடுக்கப்படுவதையிட்டு நாம் கவலை அடைகிறோம். உறைவிடவகை, தொழில் வாய்ப்புக்கள், சமூக ஆதரவு, பாதுகாப்பு அவரவர் சமூகத்துடனும் (உற்றார் உறவினர்) வீட்டுச் சூழலுடனும் உள்ள உளவியல் நெருக்கம் பற்றிய அவர்களது அபிப்பிராயங்கள் ஆர்வங்கள் ஆகியவற்றை கணக்கெடுத்து எத்தகைய முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும். ஒரு முகாமில் விசேட தேவைகளையும், வித்தியாசமான தேவைகளையும் உடைய பல்வேறு வகையான இடம்பெயர்க்கபட்ட மக்கள் தங்கியிருக்கக் கூடும். இத்தகை வித்தியாசங்கள் பால்நிலை, வயது, கலாச்சார பின்னணி, சமூகப் பொருளாதார அந்தஸ்து, வருமானவழிகள் முதலியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. இத்தகைய வித்தியாசமான மக்கட் பிரிவுகளை கலந்துரையாடலின் போது கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

வித்தியாசமான மக்கள் குழுக்கள் வித்தியாசமான தீர்வுகளை வேண்டி நிற்பர். எனவேதான் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்கள் கூட்டமைப்பினராகிய நாம் இடம்-பெயர்க்கப்பட்ட பெண்களின் தற்காலிக, நீண்டகால நலன்களுக்கான ஒழுங்குகளைச் செய்யும் போது அவர்களது கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என அழுத்திக் கூறுகின்றோம்.

பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும் எனத் தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

- பெண்களது ஜீவனோபாயங்கள் பற்றிய அக்கறை பெரும்பாலும் ஆண்களில் இருந்து வேறுபட்டது. அவர்களது சொந்த சமூகச் சூழலுடனும் அதன் பௌதீகச் சூழலுடனும் தொடர்புபட்டது. மீளக்குடியமர்த்தல் தொடர்பான முடிவுகள் எடுக்கும் போது இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
- பெண்களுக்கு ஏற்கெனவே பழக்கமானதும் பலமான சமூக வளங்கள் உள்ளதுமான இடங்களே பெண்களதும் அவர்களது பிள்ளைகளதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இடங்களாக அமையும். இந்தப் பயங்கரமான பேரழிவிற்குப் பின்னர் முற்றிலும் பழக்கமற்ற இடங்களுக்கு அவர்களை மாற்றுவதானது அவர்களது உளச்சமூக, உணர்ச்சி நிலையில் எதிர்மறையான மேலதிக அழுத்தங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கும. உதாரணமாக அவர்களுக்குப் பழக்கமான சமயத்தலங்கள், சந்தைகள், ஆஸ்பத்திரிகள், உறவினர், நண்பர்களின் இருப்பிடங்களுக்குச் செல்லக்கூடிய வழிவகைகள் இருப்பின் பெண்கள் துஷ்பிரயோகம், சுரண்டல், உளவியல் தாக்கம் ஆகியவற்றிற்கு மிகக் குறைவாகவே உட்படுவர்.

- குடும்ப அங்கத்தவர்களை இழந்ததால் குடும்பத்தலைவிகளாக மாறியுள்ள பெண்களது மீள் இருப்பிடத் தேவைகள், விருப்பங்கள் குறித்து விசேட அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

- பரிச்சயமற்ற ஆண்களுடன் மிகச் சமீபமாக வாழ்வதில் உள்ள சங்கடம், அச்சம் ஆகியவற்றை முகாம்களில் வாழும் பெண்கள் வெளிப்படுத்தியுள்ளனர். பெண்கள் உடைமாற்ற, குளிக்க, உறங்க, குழந்தைகளுக்குப் பாலூட்ட தேவையான தனிப்பட்ட இடங்களை உறுதிப்படுத்துவதற்கான வழிவகைகள் குறைவாகவே உள்ளன. இடம்பெயர்க்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தும் ஒவ்வொரு இருப்பிடத்திலும் பெண்களுக்கு மாத்திரமான குறிக்கப்பட்ட இடங்கள் அமைக்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்கிறோம்.

- முகாமிலுள்ள ஆண்கள் மத்தியில் மது பாவனை அதிகரித்திருப்பதையிட்டுப் பெண்கள் கவலையடைந்துள்ளனர். இது பாலியல் தொந்தரவு, துஷ்பிரயோகம், வன்முறை என்பவற்றுக்கு வழிவகுக்கும் என அவர்கள் கருதுகின்றனர். இது ஆண்கள் அவர்களது வழக்கமான சமூகப் பாத்திரங்களை ஆற்ற முடியாத நிலைமை, ஆக்கபூர்வமான செயல் இழப்பு, ஆகியவற்றுடன் தொடர்புடையது என்பதை நாம் அறிவோம். எனவே பெண்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளுடன் ஆண்கள் முகாம்களிலும், வெளியிலும் பயனுள்ள வேலைகளில் ஈடுபடும் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் போன்ற முற்தடுப்புப் பொறிமுறைகளுக்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும.

- இடம்பெயர்க்கப்பட்டோர் உள்ள இருப்பிடங்களில் பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பெண்களுக்கு வித்தியாசமான தேவைகள் உள்ளன. முகாம் வாழ்க்கை தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும் அனைத்துக் குழுக்களிலும் பெண்கள் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். அவர்களது கருத்துக்கள் கணிக்கப்பட வேண்டும்.

- பெண்களதும், பராயமடைந்த சிறுமிகளதும் இனப்பெருக்க சுகாதாரத் தேவைகளுக்கு விசேட அக்கறை செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு இருப்பிடத்திலும் குறித்த கால ஒழுங்கில் வைத்திய சேவைகள் – கிளினிக்குகள் – இயலுமானவரை பெண் வைத்தியக் குழுவினால் (பெண்களுக்குப் பிரத்தியேகமாக) நடத்தப்பட வேண்டும். கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாரின் தேவைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- குழப்பம், பயம், நெருக்கடிகளிலும், அதிகாரம் மிக்கோரிலும் தங்கியிருத்தலைத் தவிர்க்கும் வகையில் தெளிவாகவும் உரிய காலத்திலும் தகவல்கள் பெண்களுக்குக் கிடைப்பதற்கான ஒழுங்குகள் வேண்டும். குறிப்பாக பதிவு செய்தல், வைத்திய சேவைகள், கிளினிக்குகள், உணவுப் பங்கீடு, சட்ட நிலை, இழப்பீடு தொடர்பான விடயங்கள், முகாம்களின் எதிர்கால நிர்வாகத் திட்டம பற்றிய தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் உள்ளடக்க வேண்டும்.

- மேற்கூறிய வழிவகைகளாவன சுனாமிப் பேரழிவால் மிக மோசமான இழப்புக்களைச் சந்தித்த பெண்களது உளவியல் சமூகநல நிலையில் சாதகமான, சீரிய நன்மைகளை அளிக்கும் என்பதை நாம் வற்புறுத்துகிறோம். தீர்மானம் எடுக்கும் நிகழ்வுப் போக்குகளின்போது பெண்களின் அக்கறைகளுக்கு முக்கிய இடமளிப்பது அவர்களது பிரச்சனைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதுடன் மேலதிக உளவியல் அழிவையும் தடுக்கும்.

மேற்கூறிய சிபார்சுகளும், கருத்துக்களும், மனிதாபிமானப் பணிகளுக்கான வழிகாட்டல்கள், யு.என்.எச்.சி.ஆர் தராதரங்கள் இலங்கையின் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளில் மேலெழும் விடயங்கள் ஆகியவற்றால் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளூர் மற்றும் மாவட்டரீதியாகத் தீர்மானம் எடுக்கும் அனைத்து அமைப்புகளிலும் வெவ்வேறு மீள்குடியமர் இடங்களைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகளையும் உள்ளூர் பெண்கள் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு கோருகிறோம். ■

**அனர்த்த முகாமைத்துவத்துக்கான**
**பெண்கள் கூட்டமைப்பு - மட்டக்களப்பு**

## ஒப்பமிடுவோர்

1. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
2. பெண்கள் அபிவிருத்தி மன்றம்
3. பால்நிலையடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பதற்கான செயற்றிட்டம் – கெயார் சர்வதேசம்,
4. நேத்ரா - கிரான்குளம்
5. ஒக்ஸ்பாம் சமூக நிதியம்
6. ஒக்ஸ்பாம் - GB
7. திருப்பெருந்துறை சமூக அபிவிருத்தி நிறுவனம்
8. கோறளைப்பற்று வடக்கு சமூக அபிவிருத்திச் சங்கம்
9. மக்கள் நலன்புரிச்சங்கம் – கிரான்
10. உழைக்கும் மகளிர் அபிவிருத்தி மன்றம்
11. பெண்கள் சகவாழ்வுக்கான வலையமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட தெற்கு பிரதேசங்களுக்கான விஜயம்



கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காகவும் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்காகவும் அவர்களது உடனடி தேவைகளை பூர்த்திசெய்வதற்காகவும் இவ்விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விஜயத்தில் புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கான செயற்பாட்டு வலையமைப்பிலிருந்தும் பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பிலிருந்தும் சில உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இப்பிரதேசங்களில் காலடியெடுத்து வைத்தபோது எம்மால் அவதானிக்கக்கூடியதாகவிருந்த பதாதைகளில் (பனர்) எழுதப்பட்டிருந்த வாசகங்கள் தொடர்பாக குறிப்பிடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததென கருதுகிறேன்.

'நாங்கள் ஆதரித்த, எம்மை ஆதரித்த ஆழியே
ஏன் எமக்கு கொடூரம் இழைத்தாய்?'
'நீ வஞ்சனை கொள்ள வேண்டாம்
மடிகின்றோம் நாங்கள் மடிகின்றோம்'

இவ்வாறான வாசகங்களைக் கொண்டு பதாதைகள் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன.

எம்மால் இப்பிரதேசங்களிலிருந்து சுமார் 12 அகதிமுகாம்களுக்கு செல்லக்கூடியதாகவிருந்தது. 'ருகுணு கிராமிய பெண்கள் அமைப்பு தங்காலை, மற்றும் புலம்பெயர்ந்த பெண்களின் அமைப்பு ஹம்பாந்தோட்டை ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இம் முகாம்களுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. குறித்த அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றிய நபர்களும் இந்த முகாம்களில் இருந்தமை இன்னொரு விடயமாகும்.

சில முகாம்களில் பொருட்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. எனினும் பெண்களுக்குத் தேவையான உள்ளாடைகள் சுகாதாரப் பொருட்கள் அவர்களுக்கு தேவை எற்படும்போது கிடைக்காமை கவலையைத் தருவதாக இருந்தது. நாங்கள் பெண்களுக்குத் தேவையான உள்ளாடைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான சீத்தைப்புடவை போன்றவற்றை கொண்டு சென்றிருந்தோம். அகதி முகாம்களுக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் கொண்டு செல்லும் மற்றும் நிவாரணப்பொருட்களை முகாமிற்கு கையளிக்குமாறு பணிப்பதால் நாங்கள் கொண்டுசென்ற பொருட்களை விநியோகம் செய்வதில் பெரும் கஷ்டத்தை தாங்க வேண்டியிருந்தது. சில முகாம்களிலுள்ள பெண்கள் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள போதிலும் தங்களுக்கு தேவையேற்படும்போது அவை கிடைப்பதில்லையென தெரிவித்தார்கள். நாங்கள் கொண்டுசென்ற பொருட்கள் அனைத்தையும் முகாமுக்கு பொறுப்பாக உள்ளவர்களுடன் கலந்துரையாடி அவர்களது கைகளிலே ஒப்படைத்தோம். ஒருசில இளம் யுவதிகள் அவற்றை பெற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டியதை எம்மால் அவதானிக்கமுடிந்தது. பின்னர் அதுகுறித்து அவர்களுடன் கலந்துரையாடியபோது முகாமினுள் பல்விதமாக இடம்பெறும் கேலித்தனமான செயல்கள் காரணமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கம் காட்டுவதாக தெரிவித்தார்கள். எனவே நாங்கள் கொண்டுசென்ற பொருட்களை அவர்களின் கைகளிலே ஒப்படைக்கநேர்ந்தது.

மதகுருமார்களும் துறவிகளும் (பிக்கு) இம்முகாம்களுக்கு பொறுப்பாளர்களாக இருப்பதால் மத அனுஷ்டானங்களுக்கு ஏற்பவும் நாளாந்த வாழ்க்கையில் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்தார்கள். இந்த முகாமிலுள்ள பெண்களுக்கு பாரிய பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ஒரு மீனவக்கிராமத்திலுள்ள முகாமொன்றில் வசித்துவரும் சில பெண்கள் இவ்வாறு தெரிவித்தார்கள். 'மின்சார வசதிகள் இல்லாத அகதிமுகாம்களுக்கு மின்கம்பங்களிலிருந்து கம்பிகளின் மூலம் தற்காலிகமாக மின்சார இணைப்பை பெற்றுக் கொண்டுள்ளதால் இரவு வேளைகளில் மின்னிணைப்பு துண்டிக்கப்படுகின்றது அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு எந்த விதத்திலும் பாதுகாப்பு இல்லை. மேலும் முகாம்களுக்கு பாதுகாப்பு கடமைகளின் பொருட்டு வரும் உத்தியோகத்தர்கள் வயது குறைந்த பெண்பிள்ளைகளுக்கு பாலுணர்வை தூண்டக்கூடிய கதைகளைச் சொல்கின்றார்கள்' இவ்வாறான காரணங்களால் அவர்கள் முகாமிலிருந்து வெளியே வருவதற்கு கூட முடியாதுள்ளதாக தெரிவித்தார்கள். சில ஆண்கள் குடி போதையுடன் அவர்களது மனைவியருடன் பாலியல் சேட்டைகள் விடுவதாகவும் தெரிவித்தார்கள். துரதிஷ்டவசமாக எமக்கு அவை தொடர்பான இரண்டு சம்பவங்களை கண்கூடாக பார்க்க முடிந்தது.

விசேடமாக ஒவ்வொரு அகதிமுகாமிலும் அரசியல் செல்வாக்கு மேலோங்கி இருக்கின்றமை விசேட அம்சமாகும். குறித்த அரசியல் கட்சிக்கு கூடுதலான செல்வாக்குள்ள பகுதியில் அமைந்துள்ள முகாம்களை அக்கட்சியினரே நடத்திச்செல்கின்றனர். அங்கு இருக்கின்ற உத்தியோகத்தர்கள் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாகவுள்ளனர். இவ்வாறான நிலையில் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதும் அரசியல் இலாபங்களை சம்பாதிப்பதுமே அவர்களது தேவைகளாக உள்ளன.


நாங்கள் காலி பிரதேசத்தில் அமைந்துள்ள முகாமொன்றுக்கு விஜயம் செய்தோம். அதை அப்பகுதி கிராமவாசிகள் நடத்திவருகிறார்கள். நாங்கள் அந்த முகாமிலிருந்த ஒரு பெண்ணுடன் கலந்துரையாடிய போது அவர் எவ்வித அரசியல் செல்வாக்குமின்றி முகாம் செயல்படுவதாக தெரிவித்தார். முகாம் உரிய முறையில் நடத்திச்செல்லப்படுவதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

இச்சம்பவங்கள் அனைத்தும் அரசியல் இலாபம் கருதி இடம்பெறுகிறதே ஒழிய பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரை துடைக்கவல்ல என்பது மிக தெளிவான ஒரு விடயமாகும்.

கடற்கோள் பெண்களையே அதிகளவு பாதித்திருக்கிறது. அதேபோன்று இறந்தவர்களிலும் பெண்களே அதிகமாகவுள்ளனர். இதற்கான சில விசேட காரணிகளை அவதானிப்போம். வீட்டுவேலைகளைக் கவனித்துக்கொண்டு வீட்டினுள் இருப்பவர்கள் பெண்கள். மேலும் ஓடுவதற்கு உயரமானவற்றை பற்றிப்பிடித்து ஏறுவதற்குகூட முடியாதுபோனதாக உயிர்பிழைத்த பெண்கள் தெரிவித்திருந்தார்கள். இவ்வாறான காரணங்களால் பெண்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவை தவிர அவர்கள் முகாமினுள்ளும் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள். ஆடையணிகளை மாற்றியணிவதற்கு, சலவை செய்வதற்கு, அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை. அத்தோடு பிள்ளைகள் மற்றும் வீடுவாசல்களை இழந்து அதிகளவு துயரப்படுபவர்களும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அநேகமான ஆண்கள் மதுவுக்கு அடிமையாகித் தங்களுடைய கடமைகளிலிருந்து விலகியிருக்க முயற்சிசெய்கின்றார்கள். இதுவும் அதிகமாக பெண்களேயே

**வீட்டுவேலைகளை கவனித்துக்கொண்டு வீட்டினுள் இருப்பவர்கள் பெண்கள் மேலும் ஓடுவதற்கு உயரமானவற்றை பற்றிப்பிடித்து ஏறுவதற்குகூட முடியாதுபோனதாக உயிர்பிழைத்த பெண்கள் தெரிவித்திருந்தார்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதிக்கின்றது. இவ்வனைத்து சவால்களுக்கும் மத்தியில் உள ரீதியாக அல்லல்பட்டு முகாமினுள்ளும் கஷ்டங்களுக்கு உள்ளாகிவாழ வேண்டிய நிலை பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் எங்களிடம் வீடு ஒன்றை அமைப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். அவர்கள் தற்போது பொருளாதார ரீதியிலும் மனதளவிலும் அதிர்ச்சியடைந்திருக்கின்றார்கள். அனைத்து பகுதிகளிலும் நிலவும் இந்த கொடூர பின்னணி காரணமாக மக்களின் அன்றாட இயல்புவாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புடைய போக்குவரத்து, கல்வி, தொழில் வாய்ப்புக்கள், சந்தைவசதிகள் போன்ற காரணிகளை விருத்தி செய்வதற்கான நிவாரணங்கள் உடனடித் தேவைகளாகவுள்ளன. அவர்களது எதிர்காலத்தை ஒளிமயமானதாக்குவதன் பங்களிப்பு எமக்கும் உள்ளது.

கடற்கோள் அனர்த்தம் தொடர்பாக கைவிட முடியாத பாரதூரமான கடப்பாடு அரசாங்கத்திடமும் நாட்டு மக்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள பல்வேறு குழுக்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தங்குமிடம், உணவு, அவர்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய பிரச்சனைகளுக்கு சாதாரணமானதும் வினைத்திறனுடையதுமான முழுமையான தீர்வுகளை எட்ட முடியாதுபோயுள்ளது. இதனால் இடம்பெயர்ந்தவர்களது பிரச்சனைகள் நாளுக்குநாள் தீவிரமடைகின்றன. இதற்கான இடம்பெயர்ந்துள்ள மக்களுடன் கலந்துரையாடாமை பிரதான காரணமாகும். அரசாங்கங்களுக்கு ஏற்ற விதத்தில் இப்பிரச்சனைகளுக்கான தீர்வுகளைபெற முயற்சி செய்வதன் காரணமாக நிவாரண சேவைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. குறித்த பிரதேசங்களில் நிலவும் அரசியல் முரண்பாடுகளும் இவற்றுக்கு அடிப்படையாக அமைகின்றன.

கிடைக்கின்ற நிதி உதவிகள் மோசடி செய்யப்படுவதாக இடம்பெயர்ந்த ஒருசிலர் இடர்முகாமைத்துவ குழுக்களைக் குற்றம் சாட்டியிருக்கின்றனர். இப்பேரழிவுக்கு இலக்கானவர்களில் பெரும்பாலானோர் வறியவர்களாயினும் அவர்களிடையே பல்வேறு உயர்பதவிகளை வகிக்கும் நடுத்தர மற்றும் உயர் சமூக அந்தஸ்துடைய ஒரு சிலரும் இருக்கின்றனர். இவ்வாறான முகாமைத்துவ குழுக்களை அமைக்கும்போது இடம்பெயர்ந்த பெண்கள், அரசசார்பற்ற அமைப்புக்களின் செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமத்திலுள்ள பிரபுக்கள் ஆகிய அனைத்து பகுதியினரையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையில் அதனை அமைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமையாகும்.

இங்கு விசேடமாக பெண்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது முக்கியமாகும். மீள்குடியமர்த்தப்படும் போதும் காணி மற்றும் வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போதும் பெண்களுக்கு புதிய சூழமைவுக்கு நிலைமைகளுக்கு எந்தளவிற்கு நெருங்க முடியுமென்பதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது. ஆண் பெண் சமூக நிலைமைகளை கூறுணர்ச்சியுடன் கூடிய முகாமைத்துடன் நாட்டை மீண்டும் கட்டி யெழுப்புவதற்கான திட்டமொன்றுக்கான அழுத்தத்தை கொடுப்பது இன்று எம் முன்னிலையிலுள்ள பாரிய பொறுப்பாகவுள்ளது. ■

**வயலா பெரேரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாயின் நெஞ்சுருக்கம்

சிறு கதை



டாக்டர் புஷ்பா ரம்லானி திஸாநாயக்க

மனோதத்துவ நிபுணரின் முன் ஷாலினி அமர்ந்துள்ளார். எங்கு அல்லது எதில் ஆரம்பிப்பது என்பது புரியாது திகைத்தார். கடந்த காலத்தை விட்டு விலகவே விரும்பினார், கடந்த காலத்தை மறப்பதே அவருடைய முக்கிய நோக்காகும். ஏனெனில் அதனால் ஏற்பட்ட காயங்கள் மிகவும் ஆழமானவை, அதன் வலியும் அதிகம். பல முறை தற்கொலை செய்ய எண்ணினாள். இவ்வாறான எண்ணங்கள் எழும் வேளையில், மலர்ந்த முகத்துடன் புன்னகைத்தபடி அவளது மகள் வீனா அறையினுள் நுழைவதுண்டு. அவளுக்கு இப்பொழுது தான் ஐந்து வயது. எவ்வாறு இவளை விட்டு செல்வது?

'பருக நீர் வேண்டுமா'?

மனோதத்துவ நிபுணரின் கேள்வி அவளை மீண்டும் நிகழ் காலத்திற்கு கொண்டு வந்தது.

'ஆம். தயவு செய்து பருக நீர் தருவீர்களா?'

கிண்ணத்திலுள்ள நீர் முழுவதையும் அருந்திய பின்னர் தனது கைகுட்டையினால் வியர்வைத் துளிகளைத் துடைத்தாள். அவள் அவரை நோட்டமிட்டாள். அவரது கண்கள் அவர் முன் திறந்து கிடந்த புத்தகத்தினை அலசியது. அவர் தலையை நிமிர்த்தி அவளை நோக்கினார்.

'சற்று முன்னர் உங்களுடைய கணவர் என்னை சந்திக்க வந்தார். அவர் என்னிடம் நடந்தவை அனைத்தையும் கூறினார்... எனக்கு நன்கு புரிகின்றது, இந்நிலையில் நான் இருந்திருந்தால் நானும் அவ்வாறே நடந்திருப்பேன்... ஆனால் ஒன்றை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தயவு செய்து எனக்கு எதனையும் மறைக்காது கூறுங்கள். இவ்வாறு செய்வது உங்களுடைய மன அழுத்தத்தைக் குறைக்கும்... அல்லது நான் வேறோர் வழிமுறையைக் கூறுவேன். இவ்வாறு, தற்பொழுது உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விடயங்களையும் என்னிடம் கூறுவது கடினமானதாக இருந்தால், இன்று போய் வேறு ஓர் நாள் என்னிடம் வரலாம். அதற்கான கட்டணத்தை நான் அறவிடமாட்டேன். ஆனால் மீண்டும் என்னிடம் வர முன் ஓர் புத்தகத்தை எடுத்து என்னிடம் கூற எண்ணியுள்ள அனைத்து விடயங்களையும் நீங்கள் அனுபவிக்கும், உணரும் அல்லது மனதை புண்படுத்தும் சகல விடங்களையும் அதில் குறிப்பிடுங்கள். அதை மறுபடியும் படித்து எதையாவது குறிப்பிட மறந்திருந்தால் அதையும் உள்ளடக்கி என்னிடத்தில் கொண்டு வாருங்கள். உங்களுடைய மனதில் உள்ளவற்றை எழுத்து வடிவில் வெளிப்படுத்தும் பொழுது உங்களுடைய மனப் பாரம் குறையும்.

"நன்றி டாக்டர். இரண்டாவது வழிமுறை எனக்கு உகந்ததாகவுள்ளது. நான் உங்களிடம் கூற எண்ணியுள்ள அனைத்து விடயங்களையும் ஓர் புத்தகத்தில் எழுதி கொண்ட வருகிறேன். நாளை வராமல்விட்டாலும், இவ்வாரத்திற்குள் வரப்பார்க்கிறேன்."

"அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம்... நான் உங்களுக்கு உதவி செய்யவே முயற்சிக்கிறேன். இவ்வில்லைகளை மருந்தகத்தில் வாங்குங்கள். இது உங்களுடைய மன அழுத்தத்தை குறைத்து ஓய்வு பெற உதவும்.. தியானத்தில் ஈடுப்பட முயற்சியுங்கள். இது தான் வாழ்கை. உண்மை நிலையிலிருந்து ஓடி ஒழிந்து விட முடியாது. நாங்கள் பௌத்தர்கள் என்பது உங்களுக்கு தெரியும். உலகில் அனைத்தும் நிரந்தரமற்றது. நிரந்தரமற்ற நிலையே நிரந்தரமான ஓர் விடயம். புத்தருடைய போதனைகளை உங்களுடைய வாழ்கையில் செலுத்தினீர்களானால், நீங்கள் எவ்வித முரண்பாடுகளையும் சந்தித்து முன்னோக்கி நகர முடியும்."

*...ஆனால் ஒன்றை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தயவு செய்து எனக்கு எதனையும் மறைக்காது கூறுங்கள். இவ்வாறு செய்வது உங்களுடைய மன அழுத்தத்தைக் குறைக்கும்...*

ஷாலினி மருத்துவமனையை விட்டு வெளியேறினாள். அவருடைய கணவர், தாரக்க வெளியில் மோட்டார் வண்டியில் அவருக்காக காத்திருந்தார். வீனா அவர் அருகில் அமர்ந்திருந்தாள். அவளுடைய பெரிய கருங் கண்களில் கண்ணீர் முட்டி மோதிக் கொண்டிருந்தது. திடீரென அழுகை ஆரம்பித்தது.

"அம்மா என்னை அணைத்துக் கொள்ளுங்கள்.' கண்ணீர் அலைகள் மிதந்தன. நத்தார் பண்டிகைக்கு மறு நாள் எழும்பிய பெரும் அலைகளைப் போல மீண்டும் இருவரும் அலைகளில் தத்தழித்து கரையை அடைய முயல்கின்றனர்.

சுழிகள்... அலைகள்... கதறல்கள்... உயரலைகள்... ஆழி... சுனாமி – டிசம்பர் 26, 2004ன் பின் உலகலாவிய ரீதியில் தற்பொழுது பேசப்பட்டுவரும் ஓர் புதிய சொல்.

'ஷாலி, தயவு செய்து இதை நிறுத்த வேண்டும். நீர் இச்சிறு குழந்தையையும் இக்கட்டான நிலைக்கு தள்ளுகிறீர். உன்னை சாந்தப்படுத்திக் கொண்டு டாக்டர் என்ன கூறினார் என்பதை சொல்.'

'அவர் என்னை அனைத்தையும் எழுதி கொண்டு வரும்படி கூறினார்.'

'இச்செயற்பாடு உனக்கு ஒய்வை தரும்... நீ என்ன நினைக்கிறாய்?'

'கூடிய விரைவில் இதைச் செய்ய எண்ணியுள்ளேன்.'

வீனா ஷாலினியின் மடியில் உறங்கி விட்டாள், ஷாலினி அவளின் சுருட்டையான தலை மயிரைக் தன்னுடைய கைவிரல்களால் கோதினாள்.

அவளின் முன் அப்பியாசப் புத்தகம் திறந்தபடி காணப்பட்டது. தன்னுடைய உணர்வுகளைப் போல பேனா மையும் இறுகி விட்டது போல ஷாலினி உணர்ந்தாள். சில வரிகள் எழுதிய பின்னர் அதை கிறுக்கி எறிந்தாள். கல்விப் பொதுத் தராதர சாதாரண தர வகுப்பில் கற்கும் பொழுது சிறு கதை போட்டியொ–ன்றிற்கு கதை எழுதி முதலிடத்தை பெற்றமை ஞாபகத்திற்கு வந்தது.

பிள்ளைகளின் வரவிற்குப் பிறகு கண்டியை விட்டு வெளியே போகாத காரணத்தினால், தாரக்க தனது வருடாந்த விடுமுறைக்கு அநுமதி பெற்றவுடன் ஷாலினியிடம் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு விடுமுறைக்கு இலங்கையின் கடலோர தெற்கிற்கு செல்ல ஆயத்தமாகும்படி கூறினார். தற்பொழுது வீனாவுக்கு ஐந்து வயதும் வருணவிற்கு பத்து வயதுமாகின்றது. இவர்கள் ஒரு பொழுதும் கடலைப் பார்த்தது கிடையாது. தாரக்க தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரிவதனால், அவருக்கு கீழே வேலை செய்பவர்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டியுள்ள காரணத்தினால் விடுமுறையில் செல்வதற்கு தயங்கினான். ஷாலினி ஓர் ஆசிரியர் என்ற காரணத்தினால் பாடசாலை விடுமுறைகளின் பொழுது அவளுடைய பெற்றோரைப் பார்க்க தனது குழந்தைகளுடன் மாத்தளைக்கு பயணஞ் செய்வதுண்டு. அவள் இல்லாத நாட்களில் சமையல் மற்றும் வீட்டுப் பராமரிப்பு போன்றவ–ற்றை அவரது வீட்டுப் பணியாள் கவனித்துக் கொள்வார். ஷாலினிக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பெற்றோரை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி. தாரக்க அவர்களை அங்கு இறக்கிவிட்டு கண்டிக்குத் திரும்புவார். இவ் ஏற்பாடு கடந்த மூன்று அல்லது நான்கு வருடங்களாக நடைபெற்று வருகின்றது. அதனாலேயே இலங்கையின் தென் பகுதிக்கு செல்வதென்பது ஷாலினிக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

தாரக்க வேலை ஸ்தலத்திலிருந்து வீடு திரும்பி–யவுடன் வருண அவனிடம் விடுமுறையின் பொழுது எங்கு அனைவரும் தங்கப் போகிறோம் என விசாரித்தான். இவ்வாறான பல கேள்விகளை அவன் எழுப்பினான்.

'நாம் ஹிக்கடுவை அல்லது காலியில் தங்கலாம்.'

'நாம் ஹிக்கடுவையில் தங்குவோம். அங்குள்ள பவளக்கல் தோட்டத்தை போய் பார்க்க ஆவலாகவுள்ளேன்.

அழகான பவளக் கற்களைப் பார்த்து ரசிக்க கண்ணாடியினால் நிர்மானிக்கப்பட்ட அடிபலகையை கொண்ட படகுகள் இருப்பதாக என்னுடைய நண்பன் ஒருமுறை கூறினான். தயவு செய்து இரண்டு அல்லது மூன்று இரவுகள் அங்கு போய் தங்குவோமா, அப்பா? அதன்பிறகு கதிர்காமம் நோக்கி நமது பயணத்தை மேற்கொள்ளலாம்.'

படகில் பயணம் செய்யவும் மீன்களைப் பார்க்கவும் வீனா ஆசைப்படுவதாக தெரிவித்தாள்.

'சரி... அவ்வாறே செய்யலாம்...வேறு ஏதாவது யோசனைகளும் இருக்கிறதா?' என தாரக்க வினவினான்.

'நத்தார் பண்டிகை அன்று விடியற்காலை எங்களுடைய பயணத்தை மேற் கொள்வோம். ஆனால் காலை நேரத்தோடு எழும்ப வேண்டும் கண்ணா' என ஷாலினி வருணவிடம் சுட்டிக் காட்டினாள்.

நேற்று இரவு பனிமழை பொழிந்துள்ளதைப் போன்று ஹந்தானை மலை மூடுப்பனியினால் மூடிக் காணப்பட்டது. மேகங்களுக்கு பொன் சிவப்பு நிறத்தை கொடுத்தவாறு சூரியன் மெதுவாக உதிக்க ஆரம்பித்தது. குளிர் மிக்க மந்த மாருதம் காணப்பட்டாலும், அந்நாள் ஓர் பிரகாசமான மனதுக்கிசைந்த நாளாக தென்பட்டது. காலை ஏழரை மணியாக இருந்த போதிலும் வீதிகள் வெருச்சோடி காணப்பட்டது. இரண்டு குழந்தைகளும் மோட்டார் வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்தபடி யன்னலால் வெளியே பார்த்தபடி பயணம் செய்தனர். தலதா மாளிகையின் முன் வாகனத்தை நிறுத்தி சிறிது நேரம் கைகூப்பி பிரார்த்தனை செய்த பின்னர் மீண்டும் அவர்களது பயணத்தைத் தொடர்ந்தனர். இலங்கையின் தென்பகுதிக்கு செல்வதையிட்டு வருணவும் வீனாவும் ஆவலுடனும் குதுகலத்துடனும் தென்பட்டனர். காலை ஆகாரத்தின் பின்னர், இரு குழந்தைகளும் பாட்டுப்பாடி மகிழ்ந்தனர், சிறிது நேரத்தின் பின்னர் பெற்றோரும் அவர்களுடன் இணைந்து பாடிக் குதுகலித்தனர்.

பன்னிரண்டு மணியளவில் ஹிக்கடுவை பீச் ஹோட்டலை வந்தடைந்து, அங்கு தங்க ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

'பவள கற்களை எப்பொழுது சென்று பார்வையிடுவோம்?'

'படகுகள் ஏதாவது தற்பொழுது உள்ளதா?'

'யார் இந்தப் படகை ஓட்டி செல்வது?'

'இவை மோட்டார் படகுகளா அல்லது துடுப்பினால் ஓட்டிச் செல்லும் படகுகளா?'

முடிந்தளவில் மகனுக்கு பதிலளித்து சமாளிக்க முயல்கிறாள் ஷாலினி. ஆனால் அவளது பதில்களால் மகனை திருப்திபடுத்த முடியவில்லை. அவனது சகல கேள்விகளுக்கு தெளிவான பதில் தேவைப்பட்டது. அவளது பதில்கள் மூலம் மகனை திருப்திபடுத்த முடியாத பட்சத்தில் கணவரிடம் கேள்விகளுக்கு விளக்கம் கோரினாள்.

மதிய உணவு அருந்திய பின்னர் இளைப்பாறினர். எனினும் பிள்ளைகள் இருவரும் தூங்குவதைப் போல பாசாங்கு செய்தனர். பெற்றோர் அயர்ந்து தூங்கிய பின்னர் வருண தன்னிடமிருந்த சிறு விளக்கக் குறிப்புடன் உள்ள அகராதியை எடுத்து பவளகற்பாறைகள் மற்றும் கடற்தாவரங்கள் பற்றியும் வாசித்தான். வீனாவும் தமயனிடம் சில கேள்விகளை கேட்டாள்.

படகு நகர்ந்து கொண்டு இருக்கும் வேளையில் அதன் அடி பலகைக் கண்ணாடியினூடாகப் பார்த்தபடி இரு பிள்ளைகளும் ஆவலுடன் தென்பட்டனர். வெளிநாட்டில் வேலைபார்க்கும் பிரஷா சித்தி கொடுத்த பிறந்த நாள் பரிசான டிஜிட்டல் புகைப்பட கருவியின் மூலமாக வருண புகைப்படங்களை எடுத்தான்.

'அம்மா, தென் பகுதிக்கு எங்களுடைய சுற்றுலாவைப்பற்றி ஓர் கட்டுரை எழுதி இப்புகைப் படங்களுடன் என் பாடசாலை சஞ்சிகையில் பிரசுரிப்பேன்.'

'அது ஓர் நல்ல யோசனை' தாரக்க தனது சம்மதத்தை தெரிவித்தார். 'வீனா கண்ணே, நீ என்ன செய்யப் போகிறாய்?'

'இக் காட்சிகளை வரைந்து வர்ணம் தீட்டி, என்னுடைய ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் காண்பிப்பேன்.'

'அதுவும் ஓர் நல்ல யோசனையே' எனக் கூறி ஷாலினி தனது மகளின் சிவந்த கன்னங்களுக்கு முத்தமிட்டாள்.

'அம்மா, நாளைக் காலையும் கடற்கரையில் விளையாட ஆசையாக இருக்கிறது. இது மிகவும் அழகாகவுள்ளது.' வருணவிடமிருந்து இன்னுமொரு வேண்டுகோள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீனாவும் இவனுடன் இணைந்து கொண்டாள். 'ஆம்... நானும் இவனோடு வந்து மணல் கோட்டைகளை கட்டுவேன்.'

"ஆனால் இன்று இரவு நத்தார் பண்டிகை வைபவம் உள்ளது. உங்களில் யார் நடனமாடி வெற்றி பெற போகிறீர்கள்?"

இராபோஜனத்தின் பின்னர் அனைவரும் நத்தார் பண்டிகை வைபவத்திற்கு சென்றனர். இவ்வைபவம் நடைபெற்ற மண்டபம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அங்கு ஓர் பெரிய நத்தார் மரமும் தென்பட்டது. இரு குழந்தைகளும் சிறுவருக்கான நடனப் போட்டியில் கலந்துக் கொண்டனர். பங்குபெற்ற அனைவரையும் வருணவின் நடனம் வியப்பில் ஆழ்த்தியது. சிறந்த நடன நாயகனாக வருண தெரிவு செய்யப்பட்டான். அதுமட்டுமல்லாது இருவருக்கும் நத்தார் தாத்தாவிடமிருந்தும் பரிசுகளும் கிடைத்தன.

'என்ன ஓர் இன்பகரமான மாலைப்பொழுது' தாரக்க சுற்றி நடைபெற்று கொண்டிருப்பவையை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

மறு நாள் காலை ஆறு மணியளவில் வருண நித்திரை விட்டெழும்பி பெற்றோர்களை தன்னுடன் கடற்கரையிற்கு வருமாரு வற்புறுத்தினான. வீனாவும் எழும்பி தன்னுடைய நீச்சல் உடை மற்றும் நீச்சல் கண்ணாடி மற்றும் தொப்பி போன்றவற்றை அணிந்து தேனீரை அருந்திய பின் நீச்சலுக்கு செல்ல ஆயத்தமாக இருந்தாள். இக்காரணத்தினால் பெற்றோரும் வேறு வழியின்றி எழும்பினர்.

நீல வானில் ஓர் சிறியளவிலான மேகத்தை கூட காண இயலாதவாறு அந்நாள் தெளிவாக அமைந்தது. சிறிது நேரம் நீந்திய பின்னர் பிள்ளைகள் இருவரும் கடற்கரையிற்கு வந்து மணல் கோட்டைகளை அமைத்தனர். பெரிய கோட்டை ஒன்றை அமைக்க வீனா தன்னுடைய சிறிய கரண்டியினால் மணலை அள்ளி தனது தமயனுக்கு கொடுத்தாள். தனது முழுத் திறமையையும் உபயோகித்து வருண ஓர் அழகான மணல் கோட்டையை அமைக்க முயன்றான். நேற்று மாலை தன்னுடன் நடனமாடிய பல சிறுவர்கள் அங்கு மணல் கோட்டைகளை அமைப்பதை அவதானித்தான். ஓர் சிறுவன் அவனது தந்தையின் முழு உடலையும் மணலால் மூடுவதை கவனித்தான். தந்தை மிகவும் பொருமையுடன் படுத்திருந்தார். சில குழந்தைகள் கரப்பந்தாட்டம் விளையாடினர். பிறநாட்டு சுற்றுலாப் பயணிகள் சூரிய ஒளியிலும் கடற்காற்றிலும் சுகங் கண்டனர். அவர்கள் தங்களுடைய உடல்களை கடும் சூரிய ஒளிக்கு வெளிப்படுத்தி பழுப்பு நிறத்திற்கு தோலை பதனிட்டனர். தங்களிடம் இல்லாத ஒன்றை பெற்றுக் கொள்ள மக்கள் விரும்புவது இயல்பான விடயம். ஆசியர்களும் ஆபிரிக்கர்களும் வெண்மையானவர்களாக மாற முனையும் அதேவேளை ஐரோப்பியர்கள் கருமையானவர்களாக மாற முனைகின்றனர். பெரும்பாலானோர் தங்களிடம் உள்ளதை வைத்து சந்தோஷமடைவதில்லை. வெவ்வேறு ஆசைகள்... விருப்பங்கள்...

ஓர் பேரலை கரைக்கு வந்த அடுத்த கணம் ஷாலினி தனது நினைவலைகளிலிருந்து மீண்டு வந்தாள், தனது குழந்தைகளை தேடினாள்.

'அய்யோ, என்னுடைய மணல் கோட்டை...ஓர் கணத்தில் அது அழிக்கப்பட்டு விட்டதே' வருண கூச்சலிட்டான்.

'அம்மா, அங்கே பாருங்கள், கடல் பின்நோக்கி செல்லுகின்றது...அங்கு ஆடுகின்ற மீன்களை பாருங்கள். நாம் அங்கு போய் சிலவற்றை பிடிப்போம்.'.

'தாரக்க இது சாதாரண நிகழ்வல்ல, தயவு செய்து போய் வருணவை பிடித்து கொள்ளுங்கள்.' ஷாலினி கதறினாள். அவர்களைவிட்டு தாரக்க வெகு தூரத்தில் இருந்தார்.

'தாரக்க, இங்கு துரிதமாக வாருங்கள்...' இவ்வார்த்தைகள் தாரக்கவின் செவியில் ஒலிக்க முன்னரே ஓர் பேரலை வந்து அனைவரையும் அடித்து சென்றது. எனினும், ஷாலினி, இரு பிள்ளைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டாள். தாரக்க அவர்களிடம் வந்தடைய முயற்சி செய்தார். எல்லா இடங்களிலும் கதறி அழும் ஓசை...என்ன நடக்கின்றது என ஒருவராலும் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. உலக அழிவு தொடங்கி விட்டதா? ஷாலினி தாரக்கவைத் தேடினாள். அலைகள் சக்திமிக்கவையாகவும் கொடூரமானவையாகவும் இருந்த காரணத்தினால் இதை எதிர்கொள்ளக் கடினமாக இருந்தது. தாரக்கவினால் இவர்களிடம் வந்து சேர முடியவில்லை. இரு குழந்தைகளையும் காப்பற்ற போராடினாள், ஆனால் அதற்கு நீந்த வேண்டிய தேவை இருந்தது. அய்யோ! கடவுளே...எனக்கு உதவி செய்... என்னால் எப்படி நீந்த முடியும்...? எதையாவது இறுகப் பற்றிக் கொள்ள எனக்கோர் கை தேவை...ஆனால் எப்படி என்னால் ஓர் குழந்தையை கைவிட முடியும்? வீனா அதிர்ச்சியில் திகைத்தாள்...வருண எதோ பேச முயன்றான்.

'அம்மா என்னை நீந்த விடுங்கள். நான் அப்பாவிடத்தில் செல்கிறேன். தயவு செய்து தங்கையை இறுக பிடித்துக் கொள்ளுங்கள்...'

'இல்லை இல்லை..., இவ்வலைகள் மிகவும் கடுமையானவை உன்னால் நீந்த முடியாது...இப்படியே முயற்சிப்போம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா, இது முடியாத காரியம் என்னைப் போகவிடுங்கள்.'

ஒரு பிள்ளையை போகவிட வேண்டிய நிர்பந்தம் ஷாலினிக்கு ஏற்பட்டது. வீனாவால் நீந்த முடியாது ஆனால் வருண ஓர் நீச்சல் வீரன் என்பது அவளுக்கு தெரியும். அவனால் நீந்தி அப்பாவிடம் செல்ல முடியுமா? அத் தருணத்தில் அவள் தீர்மானம் ஒன்றிற்கு வராவிட்டால் மூவருமே அலையால் அடித்து செல்லப்பட்டு அலையில் மூழ்க நேரிடும்.. அவளால் எவ்வாறு முடிவை எடுக்க முடியும்? எவ்வாறு ஒரு பிள்ளையைப் போக விடலாம்? எது எவ்வாறாயினும் அவள் முடிவெடுக்க வேண்டிய நிலை... தாங்கொணாத்துயர்...எவ்வளவு தர்ம சங்கடமான நிலை?

'இறைவா, நான் ஓர் தவறான முடிவை எடுத்திருந்தால் என்னை மன்னியும். நான் ஒரு பிள்ளையைப் போகவிட வேண்டும்...என்னுடைய வீரன் தப்பித்து பிழைத்துக் கொள்வான்.'

அவள் தன்னுடைய கையை விரிக்க முன்னரே, வருண அவளுடைய கையைவிட்டு நீச்சலிட ஆரம்பித்தான். ஷாலினி ஓர் பலமிக்க கிளையை பற்றிக் கொண்டாள், இன்னும் அவளால் தாரக்கவை கண்டு கொள்ள முடியவில்லை. வீனா கடல் நீரை விழுங்காமல் இருக்கும் வண்ணம் அவளை உயர்த்திப்பிடித்துக் கொண்டாள்.

கதையைப் படித்த மனோதத்துவ நிபுணரின் கண்கள் கலங்கின, எனினும் அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு திடமாக இருக்க முயன்றார்.

'டாக்டர் என்னால் மேலும் எழுத முடியவில்லை. அதன் பின்னர் என்னுடைய மகனை நான் காணவே இல்லை. தாரக்க நீந்தி தப்பித்துக் கொண்டார். ஆனால் அவரும் மகனருகில் வந்து சேர முடியவில்லை.

இவை அனைத்தையும் என்னால் எவ்வாறு மறக்க முடியும். தயவு செய்து என்னுடைய மகளை குணப்படுத்துங்கள். அவள் உள ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கிறாள். அத்துடன் தமயனின் மறைவை அதிகமாக உணர்கிறாள்.'

ஷாலினி தன்னுடைய உணர்வுகளை கட்டுப்படுத்த முயன்றாள். தன்னுடைய கதையை எழுதிய பின்னர் ஓரளவு மன பாரம் குறைந்தது போன்று உணர்ந்தாள். இம் மாற்றம் டாக்டர் கொடுத்த வில்லைகளாலா அல்லது அவர் காட்டிக் கொடுத்த செயல் முறையினாலா என்பதை அவளால் சரியாகக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. தியானமும், இச்செயற்பாடுமே மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ■

# பெருக்கெடுத்த கடலின் ஒரு துளி

**கடற்கோள் அனர்த்தத்தை எதிர்கொண்டரிபாயாவின் காலியில் ஏற்பட்ட அனுபவம்**

பறவைக்கூட்டங்கள் விடியலை வழமைபோல் உணர்த்த ஆதவன் தன் கதிர்களை எட்டுத் திக்குகளிலும் பரப்பி பூமிக்கு ஒளியால் ஆலவட்டம் பிடித்தான். ஒருநாள் மலர்ந்தது. இந்நாள் இந்தளவுக்கு பயங்கரமானதாகவும் கொடூரமானதாகவும் அமையுமென எவரும் ஒருபோதும் நினைத்துக்கூட பார்த்திருக்கமாட்டார்கள். அன்று 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஞாயிறு தினமும் போயா தினமும் ஒன்றாக வந்தநாள். பல்வேறு எண்ணங்களையும் ஆசைகளையும் நெஞ்சில் சுமந்துகொண்டு எல்லோரும் புதிய நாள் கடமைகளை ஆரம்பிக்கலானார்கள். உதித்த சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக நடு வானத்தை நோக்கி நகர சமுத்திரத்தின் இயல்பும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றமடைய ஆரம்பித்தது. எனினும் பிறந்தது முதல் கண்ணுக்குத் தெரிகின்ற சமுத்திரத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை என்னால் உணர முடியவில்லை. அதனால் அதைநோக்க வேண்டிய தேவையும் ஏற்படவில்லை. கடலோடு அன்னியோன்னியமாக வாழ்ந்த காரணத்தினாலோ என்னவோ அதனுடைய கோபத்தை எம்மால் உணரமுடியாது போயிற்று. சில மாதங்களாக மிகவும் மௌனமாக இருந்ததால் கடற்கரை எம்மனைவருக்கும் சொந்த மண்ணாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப்பொழுதில் அமைதியான கடற்கரை பல விளையாட்டுக்களில் ஈடுபடும் சின்னஞ்சிறுசுகளினாலும் வயதுவந்தவர்களினாலும் நிரம்பி காணப்படும். கடல் மற்றும் கடற்கரையிலிருந்து வீசும் இளந்தென்றல் எல்லோருக்கும் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் கொண்டுவரும். மனதில் பலவித கவலைகளையும் குமுறல்களையும் சுமந்துவரும் பெரும்பாலானோர் அவற்றை காற்றோடு காற்றாக கலந்து ஆறுதல் அடைந்தமைக்கு காரணம் துன்பத்திலும் இன்பத்திலும் கடலும் கரையும் எமக்கு நெருங்கிய நண்பனாக இருந்துவந்தமையாகும்.

மௌனமாக இருந்த கடல் திடீரென்று ஒருவருக்கும் தெரியாமலேயே ஆத்திரமும் கோபமும் கொண்டது. இதனால் ஆச்சரியமடைந்த பலர் தமது நண்பனை நெருங்கியது வழமைபோல இன்பதுன்பங்களை பகிர்ந்துகொள்ளவதற்கே ஒழிய தம் உயிர்களை காவுகொள்ள முன்நோக்கி வருவதை அவர்கள் கனவில்கூட நினைத்திருக்கவில்லை.

பெரு நீர்ப்பரப்பு இமைப்பொழுதில் கடற்கரையை தாக்கியது. விடுமுறையை கழிக்கச்சென்றிருந்த நான் எதேச்சையாக வீட்டின் பின்புறத்தை பார்த்தேன். முதலாவது அலை பின்புறத்திலிருந்து குளியல் அறைக்கு அருகில் வந்த அதேவேளை இரண்டாவது அலை அதை விரட்டியபடி வானுயரவந்தது. என்னையறியாமலேயே நான் கதறியபடி வீட்டில் உள்ளவர்களையும் அழைத்து-க்கொண்டு வீதியை நோக்கி ஓடினேன். ஆனால் அதிகதூரம் செல்ல முடியவில்லை நாங்கள் கடல் நீரிற்குள் அகப்பட்டோம். நீரால் இழுத்துச் செல்லப்பட்ட நாங்கள் உள்ளேசென்றும் மிதந்தும் வீதியின் அடுத்தபக்கமாகவுள்ள வீடொன்றை சென்றடைந்தோம்.

தண்ணீரின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாது வீட்டின் கதவுகள் நொறுங்கிப்போயின. நாங்கள் ஒவ்வொருவரும் அலறியபடியே நீருக்குள் மூழ்கியும் மீண்டும் வெளியே வந்தும் மீண்டும் உள்ளேசென்றும் மீண்டும் வெளியேவந்தும் வாழ்வை வென்றெடுக்க பெரும் போராட்டத்தில் ஈடுபட்டோம். வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான எதிர்பாராத இந்த பொழுது 45நிமிடம்வரை நீடித்தது. நாங்கள் பலமுறை கூக்குரலிட்டபோதும் அதனை செவிமடுக்க எவரும் இல்லை. வாழ்க்கை தொடர்பான அனைத்து ஆசைகளும் எதிர்பார்ப்புக்களும் கொஞ்சம் கொஞ்சமாக கைநழுவின. நாங்கள் மரணத்தின் முன்னிலையில் மண்டியிட்டு ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகினோம். நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்காகவும் புலம்பினோம். நாங்கள் ஒவ்வொருவரும் கண்ணுக்கெட்டிய தூரத்திலேயே காணப்பட்டோம். என்னுடனிருந்த எனது தாயார் கைநழுவி நீருடன் இழுத்துச்செல்லப்பட்டு தென்னம் ஓலையில் தொங்கியவாறு இருந்தார்.

எனது தங்கை, மூத்த சகோதரனின் இரண்டு பிள்ளைகளையும் கையில் பிடித்தபடி மூன்று உயிர்களையும் காப்பாற்றுவதில் பெரும் போராட்டத்தை நடத்தினார்.

வாழ்க்கையின் இறுதி நொடியில் அவள் தன்னை நோக்கிவந்த வாழை மரத்தைப் பிடித்து மூவரும் உயிர்தப்ப பிரயத்தனம் மேற்கொண்டார்கள். மூத்த சகோதரி தனது இரு குழந்தைகளுடன் வாழ்க்கைக்கும் மரணத்திற்கு-மிடையிலான போராட்டத்தின் கடைசிப்பொழுதில் சிறிய மரக்கட்டையொன்றை பிடித்து வெற்றி கண்டார். 45 நிமிடங்களாக பேரலையுடன் போராடிய எமக்கு இப்போது வாய்திறந்து பேசுவதற்கு வலிமையில்லை.

நாங்கள் நீரில் மிதந்தோம். நீர் மட்டமானது கழுத்தின் அளவிலிருந்து குறைந்துகொண்டு சென்றபோது மரணத்தின் இருள்கொஞ்சம் கொஞ்சமாக அகன்றது. நாங்கள் வாழ்வை வென்றெடுப்பதற்காக போராடிய அந்த நொடிப்பொழுது வாழ்ந்து கழித்ததைப்போல நூறுமடங்கு விசாலமானதாக இருந்தது. கடவுளே நாங்கள் இன்னும் வாழ்கிறோம்.

எம்மைப்பற்றி எமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. எங்களுக்கு அறிமுகமான அநேகமானோர் நிரந்தரமாக எம்மிடமிருந்து விடைபெற்றுவிட்டார்கள். மேலும் கொஞ்சகாலம் சீவிக்க நாங்கள் அதிஷ்டமுடையவர்-களானோமா? நாங்கள் உயிர் தப்பியது தெய்வத்தின் அனுக்கிரகத்தினால் அல்லவா? உயிரைக் காப்பாற்றிக் கொண்டு கிராமத்திற்குள் நுளைந்த எம்மை அனைவரும் மிகுந்த வியப்புடன் நோக்கினார்கள். "முகத்துவாரத்-திலிருந்து எவ்வாறு உயிர்தப்பினீர்கள்" சொல்வதற்கு ஒன்றுமில்லை கடந்துபோன நிகழ்வை மீட்பதற்கு நா வாய்ப்பளிக்கவில்லை. நாங்கள் பெரும் அதிர்ச்சியடை-ந்திருந்தோம். வழமையான சீவியத்திற்குள் நுளைய சில வாரங்களை கடத்த வேண்டியிருந்தது.

எங்கள் வீடு மற்றும் அனைத்துச் சொத்துக்களும் எமக்கு இல்லாதுபோயின. இறுதியில் நாங்கள் கடற்கோளால் பாதிக்கப்பட்ட அகதிகளானோம். அன்றுபோல இன்றும் எம் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் உயிருடன் இருப்பது ஆறுதலை அளிக்கின்றது.

(அல்லாஹ் அல்ஹம்துல்லில்லாஹ்) ■

**ரிபாயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியினால் தாக்கப்பட்ட சமூகங்கள் பாதிக்கப்பட்டவர்களல்ல அவர்கள் உரிமைகளைக் கொண்ட பிரஜைகள்



அவர்கள் தகவல்களைப்
பெற்றுக் கொள்ளும்
உரிமையையும்
ஆலோசனைகலை வழங்கவும்

தீர்மானங்கள் எடுப்பதில்
பங்கு கொள்ளவும் உரிமை
கொண்டவர்கள் நிலையான
மீள்கட்டமைப்பு மற்றும் புனர்வாழ்வு
நடவடிக்கைகளில்
**பெண்கள்** முக்கிய இடத்தை வகிக்கின்றனர்

## *பெண்களின் குரல்கள் ஒலிக்க இடமளிப்போம்!*

மீள்கட்டமைப்பின் சகல விடயங்களிலும் **பெண்களை உள்ளடக்கி** பால் ரீதியிலான அக்கறையைச் செலுத்துவோம்

தற்காலிக மற்றும் நிரந்தர மீள்குடியிருப்புப் பிரதேசங்களில் அடிப்படைத் தேவைகளான உணவு, நீர், மின்சக்தி மற்றும் சுகாதார வசதிகளை சமத்துவமாக பகிர்ந்தளிப்பதை **உறுதி செய்தல்**

நிரந்தர உரைவிடம் மற்றும் மீள்குடியேற்ற கிராமங்களில் **பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுத்தல்**

வீடுகளைப் பற்றியும் அவற்றை மாற்றிடங்களில் அமைப்பது பற்றிய திட்டங்களையும் **பெண்களுடன் கலந்தாலோசித்தல்**

காணி, நில ஒதுக்கீடு, உரிமைகோரல், மற்றும் வீடமைப்பிற்கான பண உதவிகள் மீள்கட்டமைப்புத் திட்டங்களில் நிலையான சமூக உளவியல் உதவி மற்றும் இனவிருத்திச் சுகாதார சேவை முக்கிய இடம் வகிப்பதை உறுதிப்படுத்துவோம்.

காணி, நில ஒதுக்கீடு, உரிமைகோரல், மற்றும் வீடமைப்பிற்கான பண உதவிகள் சம்பந்தமாக **பெண்களுக்கெதிராக பாரபட்சம் காட்டாதிருப்பதை உறுதி செய்வோம்.**



பாரம்பரிய மற்றும் நவீன
முறையிலான வேலைப்
பயிற்சியினூடாகப் பெண்களின்
வாழ்வாதாரத்திற்க்கு
**உதவி புரிவோம்.**

பெண்கள் தொடர்பு
ஊடகங்களுக்கான கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தினி என் தோழீ...

கல்லையும் முள்ளையும் சிதைவுகளையும் கடந்து
நான், அடைந்தேன் கல்லடிப்பாலத்தை
நடந்து நாவலடி வீதியில்
என் தோழி சாந்தினியே
உனைக்காண வந்தேன்

அந்த நாளில் நாம் வரும்போது
உன் புன்னகை பூக்கள் மலர்ந்து
வீடு வாசல் இருந்த இடத்தையெல்லாம்
கண்டுகொள்ள முடியவில்லை
சுகம் அறிய என்னருகில்
இல்லை ஒருவரும்

அம்மையும் அப்பனும் அருகில் இருக்க
களப்பு கரையில் உன் கூந்தல்
அசைந்து அசைந்து ஆடியதை
அகதிமுகாமில் அயல்வீட்டு
சிவம் தம்பி சொன்னான்
ஐயாவுடனும் மகளுடனும்
மீனகயா புகையிரதத்தில்
பண்டிகை விடுமுறைக்கு
உன் வீட்டுக்கு வருவதற்கு
நான் கண்ட கனாக்கள்
கண்ணீராக மெதுவாக சிந்தின

உனது கவிதைக்கு உவமை சேர்த்த
நீ காதலித்த ஆழிப்பெருங்கடல்
என் தோழி சாந்தினி
உன் சிறப்பை மறைத்துவிட்டது.

சுமிக்கா பெரேரா

Printed by Navamaga Printers, 66/4, Sri Dharmarama Road, Ratmalana

ரூ. 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org